
அதிரடிப் படை!
3.வது ஆண்டு மலர்!
லயன் காமிக்ஸ்
ரூ.3/-

அன்பார்ந்த வாசகர்களே, 1-7-'87.

உங்கள் அபிமான லயனுக்கு இன்றோடு மூன்று வயது பூர்த்தியாகிறது!

1984ல் இதே தேதியில் சின்னக் குழந்தையாக அடியெடுத்து வைத்த நமது சிங்கம் இன்று காமிக்ஸ் உலகின் ராஜாவாக நிற்கிறது!

காரணம்? - ...வாசகர்களாகிய உங்களின் ஏகோபித்த அன்பும் ஆதரவும் தான்!

தொடர்ந்து இதே போல நமது லயன் மீது அன்பு காட்டி, மென்மேலும் உயரங்களுக்கு இட்டுச் செல்வீர்களென்ற திட நம்பிக்கை எனக்குண்டு!

மிக்க நன்றி!

அன்புள்ள,






நன்றி: P.கலை அரசன், P.ஆறுமுகம்
A.மேகநாதன், P.தென்னரசி. மயிலாடுதுறை.


அதிரடிப் படை!
ஃபிளைட் டி. எம்- 524 மத்திய ஐரோப்பாவிலுள்ள ஒரு விமான நிலையத்திலிருந்து நேரப்படி கிளம்பியது...
SOS
SPECIAL OPERATIONS SQUAD
அத்தியாயம்—1


...சில நிமிட அமைதியான பயணத்திற்குப் பின்—
யாரும் அசையக் கூடாது .. மீறினால் இந்த வெடிகுண்டு வெடிக்கும்— ஜாக்கிரதை!
வீணாக என் துப்பாக்கிக்கு வேலை கொடுக்காதீர்கள்— உயிர் பறி போய்விடும்...
இந்த பை நிறைய வெடிகள் இருக்கின்றன... கேள்வி ஏதும் கேட்காமல் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியுங்கள்...


விமான கடத்தல் காரர்களின் நிர்ப்பந்தத்தின் பேரில் அவர்கள் குறிப்பிட்ட விமான நிலயத்திற்கு கொண்டு போய் விமானத்தை தரையிறக்கினர் பைலட்.
யாரும் கீழே இறங்கிச் செல்ல அனுமதிக்கப் படவில்லை— நேரம் நகர்ந்து கொண்டிருந்தது...
பேச்சு வார்த்தை தொடங்கியிருக்கிறது இந்த நாட்டில் சிறை வைக்கப் பட்டிருக்கும் எங்கள் தோழர்கள் ஆறு பேரும் விடுதலை செய்யப் பட்டதும் உங்களை அனுப்பி வைப்போம்...
அவர்களை விடுதலை செய்ய அதிகாரத்தில் உள்ளவர்கள் மறுத்தால் நீங்கள் அனைவரும் கொல்லப் படுவீர்கள்.
அப்பொழுது...
ஆமாம்... இதுதான் தருணம்—
உங்களுடைய நாடகத்தில் நானும் பங்கேற்கத் தீர்மானித்து விட்டேன்...
சத்!
ஆ... ஹ!


ஆனால் ஹைஜாக் கும்பலைச் சேர்ந்த நாலாவது ஆசாமி ஒருவன் அதுவரை தன்னை வெளிப் படுத்திக் கொள்ளா மல் பயணிகளிடையே கலந்து இருந்து விட்டது எதிர் பாராததும் துரதிர்ஷ்டவச மானதும் ஆகும்...
ஆ ஆ...!
முட்டாள்கள்...! எந்த எதிர்ப்பையும் காட்டக் கூடாது என்று ஏற்கனவே எச்சரித்திருந்தோமே...
எங்களை தாக்கத் துணிந்த நாய் சுயவுணர்வு பெற்று எழுந்ததும் சுட்டுக் கொல்லப் படுவான்
ஒரு வேளை... நீங்கள் அனைவருமே சுட்டுக் கொல்லப் படலாம்!
ஆனால் விமானம் கடத்தப்பட்டு நான்கு தினங்கள் முடிந்த பின்னரும் யாரையும் அவர்கள் கொல்லவில்லை. கடத்தல்காரர்களுக்கும் உள்ளூர் அதிகாரிகளுக்கும் இடையே பேச்சு வார்த்தை தொடர்ந்து நடந்து வந்தது. காயமுற்றிருந்த போதிலும் ஜான்வெஸ்ட் கொஞ்சமும் நகர முடியாதவாறு கட்டப்பட்டுக் கிடந்தார்.
இறுதியில்... வேறு வகையின்றி அரசாங்கம் கடத்தல் காரர்களின் நிபந்தனையை ஏற்றுக் கொண்டது... ஹைஜாக் நாடகம் ஒரு முடிவுக்கு வந்தது. பிணையாக இருந்த விமான பயணிகளின் பயங்கர அனுபவமும் முற்றுப் பெற்றது
இந்தச் சண்டாளர்களின் கோரிக்கைக்கு அரசு அடிபணிந்திருக்கவே கூடாது...ஹூம்!



ஜான் வெஸ்ட் நிகழ்த்திய— அல்லது நிகழ்த்த முயன்ற— வீரச் செயல் கண்டு கொள்ளப்படாமலே போய் விடவில்லை! பிரதமரின் இல்லத்திற்கு வருமாறு ஜான் வெஸ்ட்டுக்கு அழைப்பு வந்தது.
ஹைஜாக் போன்ற அசம்பாவிதங்களை எப்படி தடுப்பது—சமாளிப்பது என்பது பற்றிய என் கருத்துக்களை பிரதமரோடு மனம்விட்டுப் பேச இது ஒரு அருமையான வாய்ப்பு...!
சந்திப்பின் போது—
என் ஆசை என்னவென்றால்... பயங்கரவாதம் உலகின் எந்த மூலையில் தலைநீட்டினாலும் மின்னல் வேகத்தில் இரகசியமாக அங்கே சென்று வெறியர்களை வேரறுக்கும் ஆற்றல் கொண்டதாக ஒரு குழு அமைக்கப்பட வேண்டும்...! மாறுபட்ட ஆனால் ஒருங்கிணைந்த திறமை படைத்த செயல் வீரர்கள் மட்டுமே குழுவில் இடம் பெறுவர்...
எத்தனை பேர்— யாரெல்லாம்... குழுவில் இருக்க வேண்டும் என்று நீ விரும்புகிறாய்?
ஆரம்பத்தில் என்னையும் சேர்த்து அதிக பட்சம் நான்கு பேர் இருந்தால் போதும்— யார் அந்த மற்ற மூவர் என்று ஒருவாறு தீர்மானித்து வைத்திருக்கிறேன்!
அப்படியானால் உடனே செயலில் இறங்கு... குழுவை அமைக்க உனக்கு முழு அதிகாரம் வழங்குகிறேன்— ஏதாவது இடைஞ்சல் ஏற்பட்டால் என்னிடம் வா!
யாரையெல்லாம் குழுவில் சேர்த்துக் கொள்ள ஜான் வெஸ்ட் நினைத்திருந்தாரோ அவர்கள் மூவரும் ஏற்கனவே சாகஸங்கள் நிகழ்த்தியவர்கள் தான். அப்போதும் கூட அவர்களில் ஒருவரான மெக்கன்ஸி தன் கூடுதல் ஆற்றல் கொண்ட ரைபிளின் டெலஸ்கோப் லென்ஸ் வழியே பார்வையை செலுத்தி குறி வைக்க முயன்று கொண்டிருந்தார்.


இரண்டாவது நபரான லாயிட் அப்போது புதுவகை வெடி ஒன்றின் செயல் திறனை சோதித் தறியும் முயற்சியில் ஈடுபட்டிருந்தான்...
டமால்!!
ஹா...வ்— படுபயங்கரம்!
மூன்றாவது நபரான ஹென்றி சிறை ஒன்றில் அடைபட்டுக் கிடந்தான்
இந்த மூவரைத் தான் தன்னோடு சேர்த்துக் கொண்டு 'அதிரடிப்படை'யை உருவாக்கத் திட்ட மிட்டிருந்தார் ஜான் வெஸ்ட்...
கச்சிதமாக குறி வைத்து சுட்டு வீழ்த்தி விட்டாய்... பிரமாதம்...
அங்கே மெக்கன்ஸி தன் கைங்கர்யத்தை காட்டிக் கொண்டிருந்தார்...
என்னுடைய குறி எப்போதுமே தவறுவதில்லை! உனக்குத்தான் தெரியுமே!


அவர்களை நோக்கி சரமாரியாக தோட்டாக்கள் சீறிக் கொண்டு வந்தன...
பன்றிப் பயல்களா... சார்லியை வீழ்த்தி விட்டீர்கள்— ஆனால் எனக்குப் பதில் சொல்லுங்கள்... பார்ப்போம்!


அவரது சகாவும் சட்டென்று பதுங்கிக் கொண்டு விட்டனர்...
அவன் வசமுள்ள தோட்டாக்கள் தீரும் வரை நாம் நேரடி தாக்குதலில் இறங்குவது புத்தி சாலித்தனமாகாது.
வேறொரு யுக்தியை கையாளு வோம்!



காத்துக் கிடக்கும் பொறுமை மெக்கன்ஸியிடம் கொஞ்சமும் கிடையாது...
வெடிகுண்டு வீசும் கருவி யை பயன் படுத்தலாம்...
சில விநாடிகளுக்குப் பின் புகை வெடி குண்டு ஒன்று வெளியே வெடித்தது...
அட... சைத்தான் களா—
டும்!
மெக்கன்ஸி துரிதமாக செயல் பட்டார்...
ஙாங்!
ஹா... யா... யாரது—
அஹ...!
நான்தான்!
இன்னும் ஒருவன் பாக்கி இருக்கிறான் என்று நினைக்கிறேன்...


திடீரென்று அங்கே சீறிக்
கொண்டு வந்தகார், மெக்கன்ஸி
நிலை குலைந்து விழ காரணமாகியது
ஆ-ஆ...வ்!
கிறீச்சிட்டு நின்றது கார்..
குறி தவறாமல் சுடும் திறமைசாலி
யல்லவா நீ — இனி யாரையும்
நீ குறி வைக்க முடியாமல் செய்யப்
போகிறேன்... இதோ - காரை
ரிவர்ஸில் கொண்டு வந்து உன்
மீது ஏற்றப் போகிறேன்!
ஆனால்... கார்
நகர முற்பட்ட
போது—
ஐ...யோ!
டமீ-டமார்!
ஹைய்...யா —
சரியாக அடித்து
விட்டேன்!
எ... எ... என்ன
நடந்தது?


யாரது... ஜான் வெஸ்ட்டா? S.O.S. படைப்பிரிவில் பணியாற்றிக் கொண்டிருப்பதாக அல்லவா கேள்விப்பட்டேன்... இங்கே எப்படி வந்து சேர்ந்தாய்!
உன்னைத் தேடித்தான்...! 'அதிரடிப்படை' ஒன்றை அமைக்க பிரதமரின் அனுமதி கிடைத்திருக்கிறது எனக்கு. அதில் நீயும் பங்கேற்க வேண்டும் என்பது என் விருப்பம்!
சரியோ... தவறோ—நீ சொல்லும் போது மறுக்கத் தோன்றவில்லை—ஆல்ரைட்...
நிச்சயம் சம்மதிப்பாய் என்று நான் எதிர்பார்த்தது தான். இனி நம்முடைய 'அதிரடிப் படை'யின் மூன்றாவது நபர்—லாயிடை சந்திக்கச் செல்கிறோம்...



நானா...? என்னைப் போய்—எதற்காக?
துப்பாக்கியை திறமையாக கையாளுவதிலும் குறி வைத்து சுடுவதிலும் உனக்கு நிகர் யார் இருக்கிறார்கள்...? மேலும் அவசர வேளைகளில் எனக்கு அடுத்தபடியாக குழுவை நடத்திச் செல்லும் பொறுப்பை ஏற்கும் திறமை உன்னிடம் உண்டு... அத்தோடு சற்றுமுன் உன் உயிரை நான் காப்பாற்றியதற்கு நன்றிக் கடனாகவும் என் வேண்டுகோளை ஏற்கிறாய் நீ!
அந்தப் பைத்தியக்காரனையா? வெடி குண்டுகளை கையாளுவதில் அவனை மிஞ்சிய சமர்த்தன் யாரும் இல்லைதான்...! ஆனால் அவன் செய்வதெல்லாம் கிறுக்குத்தனமாக இருக்குமே...!


அங்கே—
கார்ப்பொரல் லாயிட்... சோதனை முடிந்ததா?
இன்னும் இல்லே ஸார்...! கீழே இறங்கி வாருங்களேன். இரண்டாவது கருவியின் செயல்திறனை இனிமேல்தான் சோதித்துப் பார்க்கப் போகிறேன்!
இந்த சிறு பட்டனை அழுத்தினால் நம்பவே முடியாத பயங்கர விளைவுகள் ஏற்படும்...
ஜன நடமாட்டமில்லாத வெட்ட வெளியில், அந்த இரகசிய இராணுவ சோதனை, கார்ப்பொரல் லாயிடின் மேற்பார்வையில் நடந்து கொண்டிருந்தது—
...பட்டனை அழுத்தப் போகிறேன்— வேடிக்கையை காண தயாராக இருங்கள்!


மைதானத்தின் மையத்தில் சட்டென்று பூமிக்குள்ளிருந்து வெளிப்பட்டு, மேலே எழும்பியது ஒரு நூதன கருவி...
மறுகணம்— ஒரே சமயத்தில் பதினாறு வெடி குண்டுகள் பல்வேறு திசைகளில் பறந்தன...


அனைத்தும் திட்டப்படி ஏக காலத்தில் வெடித்தன...
டம் டம டம் டம் டம் டம் டம் டம்
டம்! டம்! டம்! டம் டம்
நான் வடிவமைத்த இந்த புதுவகை ஆயுதத்தின் செயல் திறனைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்... ஸார்?
அருமையான கண்டு பிடிப்பு... லாயிட்!
திடீரென்று அங்கே நிகழ்ந்த ஒரு வெடி விபத்து அவர்கள் இருவரையும் நிலை குலைந்து சரிந்து விழச்செய்தது...
டூம்!


ஸாரி...ஸார்! அதிரடி தாக்குதலாக, பதினேழாவது குண்டு ஒன்று வெளிப்படும் என்பதை மறந்து தொலைத்து விட்டேன்...!
நீ எந்தப் பக்கத்தை சேர்ந்தவன் என்கிற சந்தேகம் எனக்கு சில வேளைகளில் வந்து விடுகிறது...ஸ்டாப்!
ஹாக்கின்ஸ்... அந்தக் கிறுக்கன் வேறு ஏதாவது அசம்பாவிதத்தை நிகழ்த்தக் கூடும்—
ஒரே சமயத்தில் நூறு குண்டுகளை வீசி எறியும் கருவியை நான் இனி வடிவமைக்க முடியும் என்று நினைக்கிறேன்!
இனியும் இங்கே இருப்பது ஆபத்து... ஹாக்கின்ஸ்! வண்டியை கிளப்பு...
க்ராஷ்!
ஓடிப் போய் விடலாம்... இங்கிருந் ஆ..வ! வண்டியை நிறுத்து!
17


மன்னித்துக் கொள்ளுங்கள்... கர்னல்! தப்பியோடுவோரை மடக்கி நிறுத்தும் பொறியை இந்த இடத்தில் நிர்மாணித்திருந்தேன் — காரை நேராக அதன் மீது செலுத்தி விட்டீர்களே...
வகையாக மாட்டிக் கொண்டு விழிக்கிறேன்...! இந்தக் கிறுக்கனிடமிருந்து எப்படி தப்பிச்செல்வது என்று விளங்க வில்லையே!
அதிர்ஷ்டவசமாக அங்கேயே வேறு வகை வாகன வசதி கிட்டியது கர்னலுக்கு...
எங்கே ஸார் போகவேண்டும்?
எங்கே வேண்டுமானாலும் போ— இவனை விட்டு விலகிச் சென்று விட்டால் போதும்!
ஹீம்...! ஒரு சிலர் திறமையை பாராட்டுவதே இல்லை!
நாங்கள் பாராட்டுகிறோம்!
ஜான் வெஸ்ட்... S. O. S. படைப் பிரிவின் சூப்பர்–ஸ்டார்! இந்தப் பக்கம் எங்கே வந்தாய்...?
உன்னைத் தேடித்தான்...! நானொரு விசேட படைப் பிரிவு ஒன்றை உருவாக்கி வருகிறேன்... நீயும் அதில் பங்கேற்க வேண்டும்!
'அதிரடிப்படை' யை உருவாக்க பிரதமரின் அனுமதி தனக்கு கிடைத்திருப்பதை காப்டன் ஜான் வெஸ்ட் விபரமாக எடுத்துரைத்தார்...
சுடுவதில் தேர்ச்சி பெற்ற சார்ஜண்ட் மெக்கன்ஸி நம் படையில் ஒருவர்...! வெடி குண்டு ஸ்பெஷலிஸ்ட் நீயும் எங்களோடு சேர்ந்து கொள்ள வேண்டும்— என்ன சொல்கிறாய்?
நீ சொன்னால்... சரி!
படையில் மொத்தம் எத்தனை பேரை சேர்க்க உத்தேசம்?
ஆரம்பத்தில் நான்கு பேர் போதுமென்று நினைக்கிறேன்... நான் காவது நபரை இனி மேல் தான் சந்தித்து பேச வேண்டும்!



தற்சமயம் அந்த நபர் திருட்டுக்குற்றத்திற்காக ஐந்து ஆண்டு சிறைவாசம் செய்து வருகிறான்...
எந்த பூட்டையும் கண்ணிமைக்கும் நேரத்தில் திறந்து விடும் சாமர்த்திய சாலி... சாதாரணமாக நுழைய முடியாத இடங்களுக்குள் புக நமக்கு அவன் உதவக் கூடும்!
மீண்டும்பிரதமரை சென்று பார்த்தார் ஜான் வெஸ்ட்...
அவனுக்கு மன்னிப்பு வழங்கி விடுவிக்க என்னலா-காது காப்டன் வெஸ்ட்! ஆனால் யாருக்கும் தீங்கு ஏற்படாத வகையில் அவனை வெளிக் கொணரும் சாமர்த்தியம் உனக்கிருந்தால் அவனையும் நீ சேர்த்துக் கொள்ளலாம்— உன் திறமைக்கு இது ஒரு சவால்... நிரூபித்துக் காட்டு பார்க்கலாம்!
நிச்சயம் சாதித்துக் காட்டுகிறேன்... பிரதமர் அவர்களே!
அதன்படி...
சிறையிலிருந்து குற்றவாளி ஒருவனை விடுவிக்க இப்போது நாம் இராணுவ விமான தளத்திலிருந்து,
கிளம்பப் போகிறோம்...! யாரும் கேட்டால் நம்பவே மாட்டார்கள்...!
கேட்டால் தானே நம்ப மாட்டார்கள்? ஆனால் யாரும், எப்போதும் இதை கேள்விப்படப் போவதில்லையே!
ஓ...கே!... அதிரடிப் படையின் நாலாவது உறுப்பினரே! இதோ உன்னைத் தேடி புறப்பட்டு விட்டோம்...!


பிரிட்டனின் மேலே ஏதோ ஓரிடத்தில், மேக மூட்டத்திலுள்ளிருந்து சட்டென வெளிப்பட்டது இராணுவ விமானம்...
அதன் இலக்கு— நேர் கீழே இருந்த சிறைக்கூடம்...!



உள்ளே—அதிரடிப்படை உறுப்-பினர்கள் மூவர் இருந்தனர்...
இதோ...பச்சை விளக்கு எரிகிறது—குதிக்க தயாராகுங்கள்!




வெளியே குதித்த மூவரும் தாமதமாகவே பாரசூட்டை விரியச் செய்தனர்...


ஓசையின்றி, யாருடைய கவனத்தையும் ஈர்க்காமல் தரையிறங்கினர்!
முதல் கட்டம்... முழு வெற்றி!


வெடி குண்டு ஸ்பெஷலிஸ்ட் லாயிட் துரிதகதியில் இயங்கிக் கொண்டிருந்தான்...
பூட்டோடு இணைத்து விட்டாயா...?
இதோ... முடிந்த மாதிரிதான்!
ரெடியா?
ரெடி...!
டமால்!


சில கணங்களுக்குப் பின்—
அபாய சங்கை ஊது— குற்றவாளியை கடத்திச் செல்லும் முயற்சி இது!
புகைக் குண்டை வீசு...
இதோ—
இந்த அறை தானா?
ஆமாம்... சந்தேகம் வேண்டாம்—
ஆ..வ்! கண்ணீர் புகை...!
ஏற்பட்ட வெடி சப்தத்தால் திடுக்கிட்டு விழித்தெழுந்த ஹென்றி ஏதும் புரியாமல் குழம்பினான்...
டமால்!
யாயா..வ்!


ஏய்... நீ... நீ—
யார்...நீ?
கேள்வி கேட்காதே—எழுந்து ஓடிவா...
மேல் தளத்துக்கு செல்வோம்...!
யாரப்பா... நீங்களெல்லாம்?
மூடு வாயை! இந்தா இந்த முகமூடியை அணிந்துகொள்...
மேல் தளத்தை சென்றடைந்ததும்—
கொக்கியை துப்பாக்கியில் செருகி சுடு...!
இங்கே... மேலே—ரொம்ப குளிருகிறது!
டுப்!
க்ளிங்!
சுற்று வேலிக்கு அப்பாலிருந்த மரக்கிளையை சீராக பற்றிக் கொண்டு விட்டது அந்தக் கொக்கி...



காரியம் கச்சிதமாக முடிந்து விட்டது வெல்டன்!
நீங்கள்— காப்டன் வெஸ்ட்... அல்லவா? என்னே எதற்காக சிறையிலிருந்து மீட்டு வெளியே கொண்டு வந்தீர்கள்?
எந்தப் பூட்டையும் திறந்து விடும் உன் திறமைக்கு ஒரு நல் வாய்ப்பு கொடுக்க தீர்மானித்திருக்கிறோம்...!
மரத்தினருகே ஏற்கனவே ஒரு வாகனம் மறைவாக தயார்நிலையில் நிறுத்தப் பட்டிருந்தது...! அதிரடிப்படை பற்றிய முழு விபரத்தையும் ஹென்றிக்கு எடுத்து ரைத்தார் வெஸ்ட்....
இனி நீதான் முடிவெடுக்க வேண்டும்... எங்களோடு சேர்ந்து கொள்— அல்லது திரும்பவும் சிறைக் கம்பிகளின் பின்னல் செல்!
வேறு எப்படி தீர்மானிப்பது...? சிறையினுள் அடைந்து கிடப்பதை விட நிச்சயம் இது தேவலாம்தான்!


'அதிரடிப்படை' முழுதாக உருவாகிவிட்டது... இனி அவர்கள் நிகழ்த்திய முதல் முதல் சாதனையை விவரிப்போம்—


அத்தியாயம்-2
அதிரடிப் படையினருக்கு அவசர செய்தி ஒன்றை எடுத்துக் கொண்டு ராணுவ வீரர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் ஒரு ராணுவ பயிற்சி முகாமின் வழி விரைந்து சென்று கொண்டிருந்த போது—
திடீரென்று...!
ஆ..ஆ..வ்!


அதிரடிப் படையா?
ஆம்..., நாங்கள் தான்...!
அதிரடிப்படை தலைவரான ஜான் வெஸ்டிடம் செய்தி தரப்பட்டது...
இராணுவ தலைமை அலுவலகத்துக்கு உடனே வருமாறு அழைப்பு வந்திருக்கிறது. நம்மிடம் ஏதேனும் பணி ஒப்படைக்கப்படலாம்...
ஹீம்...!
ரட்டட்ட்
இந்த இலக்குகளை குறிவைத்து சுட்டுத் தள்ளும் குஷியில் இருந்தேன்...


தலைமையகத்தில்—
நண்பர்களே இந்த படத்தைக் கவனியுங்கள் ...நம் இரகசிய உளவாளி ஒருவர் தென்கிழக்கு ஆசியாவில் எடுத்த படம் இது.


வாவ்
.. கொடிய சர்வாதி காரி மாதிரி இருக்கிறான்!
யார் இவன்?


சில வருடங்களுக்கு முன் பிரிட்டிஷ் இராணுவத்தில் விசேட விமானப் பிரிவில் உறுப்பினராக பணியாற்றிய மேஜர் டெஸ்மாண்ட் கிங்தான் இந்த நபர்... அன்று—ஏராளமான விருதுகள் பெற்று, படைப் பிரிவில் உச்ச பதவிக்கு வருவதற்கான வாய்ப்பும் இருந்த சமயம்...
நன்கு உற்றுக் கவனியுங்கள்... படத்திலேயே எத்தனை கொடூரமாக காட்சியளிக்கிறான் பார்த்தீர்களா— இவன் ஒரு படு பயங்கரமான கொலைகாரன்
...திடீரென்று பதவியை விட்டு விலகி தான் முன்னர் போரில் ஈடுபட்டிருந்த கீழ்த்திசை நாடுகளுக்குச் சென்று விட்டார். அதன் பின் சில வருடங்களுக்கு எந்தத் தகவலும் இல்லாதிருந்தது.


சிறிது கால இடைவெளிக்குப் பின் அவன் வெளிப்பட்டபோது அடியோடு மாறிவிட்டிருந்தான்... தன் தலைமையின் கீழ் ஒரு படையை உருவாக்கிக் கொண்டிருந்தான்...
அவன் செய்த முதல் காரியம் — அவனுடைய கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசத்தை ஊடுருவிய போதைப் பொருள் கடத்தல் கும்பலை தாக்கி அழித்ததுதான...
தர்மத்தையும் நியாயத்-தையும் அமல் நடத்த முயன்றான். அநியாயங்களை வன்மையாக சாடினான்... அதர்ம காரியங்களை வேரறுக்க முயன்றான்.


திருட்டு போன்ற சாதாரண குற்றங்களுக்குக் கூட மரண தண்டனே விதித்தான்
நல்லதுதானே செய்து வருகிறன்— பின்வே எதற்காக நாம் தலையிட வேண்டும்?
தங்களுடைய நாட்டின் ஒரு பகுதியை அவன் தன் ஆதிக்கத்தின் கீழ் வைத்துக் கொண்டிருப்பதை அந்நாட்டு ஆட்சியாளர்களால் எப்படி சகித்துக் கொள்ளமுடியும்...?
எனவே, பிரிட்டிஷ் அரசு உடனே தலையிட்டு டெஸ் மாண்ட் கிங்கின் நடவடிக்கைகளுக்கு முடிவு கட்ட வேண்டும் என்று அந்நாட்டு பிரஸிடெண்ட் தாக்கீது அனுப்பியிருக்கிறர்...
ஓ. கே... கர்னல்! நாங்கள் செல்லத் தயார்...! கிங்கை என்ன செய்ய வேண்டும்?
கொன்று விடுங்கள்... அவன் முந்திக் கொண்டு உங்களை தீர்த்துக் கட்டாத பட்சத்தில்!


அத்தியாயம்-3
மேலும் தேவையான விபரங்களை பெற்றுக் கொண்டு பிரிட்டிஷ் தலைமையகத்தை விட்டு வெளியேறினர்...
ஹேய்... நில்!
யாயா...வ்வ்!
டட்டட்ட்
மெக்கன்ஸியின் துப்பாக்கியிலிருந்து வெளிப்பட்ட தோட்டாக்கள் ஹென்றி நகர முடியாதவாறு செய்தன...


ஹென்றி தடுமாறி கீழே விழுந்தான்...
என் சந்தேகம் சரியாகி விட்டது... நாம் உரையாடிக் கொண்டிருந்த போது அங்கே இருந்த வெள்ளிச் சாமான்களை அள்ளிக் கொண்டு விட்டிருக்கிறான் இந்த திருட்டுப் பயல்...!
வேண்டாம்— விடு அவனை...! பெட்டகங்களை உடைப்பதிலும் பூட்டுக்களை திறப்பதிலும் நிபுணன் அவன்— அவனுடைய உதவி நமக்கு தேவைப்படும்...
ஆனாலும் மெக்கன்ஸியின் சீற்றம் அடங்குவதாயில்லை...



இந்த அற்பப் புழுவை இந்த இடத்திலேயே, இப்போதே சுட்டு வீழ்த்த முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்—ஹீம்...!
அதையடுத்து நால்வரும் விசேட விமானம் ஒன்றில் சிங்கப்பூர் நோக்கி பயணமாயினர்...
அர்த்தமற்ற முயற்சி இது—ஒரு பயல் ஒரு சிறு பிராந்தியத்தை தன் ஆதிக்கத்தின் கீழ் வைத்துக் கொள்வது மரண தண்டனைக்குரிய குற்றமா என்ன?
தங்கள் நாட்டின் கணிசமான பகுதி இன்னொருவன் வசம் போவதை அந்நாட்டு ஆட்சியாளர்களால் எப்படி சகித்துக் கொள்ள முடியும்?
முடிந்தால் அவனை பிரிட்டனுக்குள் கொண்டு வந்து விட வேண்டும்...
அதிகார வெறி கொண்ட கிங், சாதாரண பிரஜைகளை சிறு சிறு குற்றங்களுக்கெல்லாம்—கொடுமைப் படுத்துவது, கொல்வது என்று காட்டு மிராண்டித்—தனமாக ஆட்டம் போடுவதை எப்படியேனும் தடுத்தாக வேண்டும்!
அந்த வெள்ளி மெழுகு வர்த்தி ஸ்டாண்டுகளை நான் கொழுத்த விலைக்கு விற்றிருக்க முடியும்... ஹீம்!


விமானத்தில் சிங்கப்பூர் சென்றடைந்த அதிரடிப் படையினர் ஹெலி காப்டரில் பயணத்தை தொடர்ந்தனர்...
பின்னர் படகு ஒன்றுக்கு மாறிக் கொண்டனர்...
நீரோட்டத்துக்கு எதிர்திசையில் சுமார் நான்கு மணி நேர பயண தொலைவில் கிங்கின் பிரதேசம் இருக்கிறது
இப்போதிருந்தே நம்மை தயார் படுத்திக் கொள்ள தொடங்கினால் தான் அங்கே போய்ச் சேர்ந்தவுடன் ஏதேனும் மோதல் ஏற்பட்டால் சமாளிக்க முடியும்!
என் புது தயாரிப்புகள் சிலவற்றின் செயல் திறனை இங்கேயே சோதித்துக் கொண்டு விடுவது நல்லது...
பிரமாதம்!
யாயாவ்...வ்!
டமால்!


உன் தூக்கத்தை கெடுத்து விட்டதற்கு வருந்துகிறேன்— இந்தா... நீ ஒன்றை சோதித்துப் பாரேன்!
ஐயையோ... அந்த சைத்தானை கிட்டே கொண்டு வராதே!
அங்கே சென்ற பின் இம்மாதிரி தமாஷ்களுக்கெல்லாம் வாய்ப்பிராது என்பதால் இங்கேயே முடிந்தவரை அனுபவித்துக் கொள்ளுங்கள்!


நாற்பது மைல்களுக்கு அப்பால் —
ஆற்றின் வழியாக போதை மருந்து கடத்திச் செல்ல ஒரு கும்பல் முயற்சிப்பதாக கண்காணிப்புக் குழு தகவல் அனுப்பியுள்ளது... ஊடுருவி அழிக்க வேண்டுமா?
இன்னுமா அந்த நாய்கள் கடத்தல் வேலையை விட—வில்லை? ஆல்ரைட்... தாக்கும் குழுவை புறப்படச் சொல்!


நல்லது... அரசே—நாம் பிடித்து வந்த அந்த திருடர்களை என்ன செய்ய?
கொன்று விடுங்கள்...!
நாம் அதனை நடத்திச் செல்வோம்!


அருகே இருந்த ஆற்றின் வழியே ஒரு சிறு கும்பல் படகில் போதைப் பொருட்களை கடத்திச் சென்று கொண்டிருந்தது...


திடீரென்று பாய்ந்து, அவர்களை வன்மையாக தாக்கினர்கள் டெஸ்மாண்ட் கிங்கின் ஆட்கள்
முரட்டுத் தனமான தாக்குதல்— —
விரைவிலேயே முடிவுக்கு வந்து விட்டது...
படகும், அதிலிருந்த சரக்கும் நாசம் செய்யப் பட்டன...
நம் பிரதேசத்தை ஊடுருவும் சமூக விரோத சக்திகளை அழித்து ஒழிப்பதில் தயவு, தாட்சண்யம் காட்டாதீர்கள்... அதே போல் நமக்கு எதிராக கிளம்பும் எந்த ஒரு சக்தியையும் சவு இரக்கமின்றி நாசம் செய்யுங்கள்!



டெஸ்மாண்டின் பிரதேசத்தை நோக்கி படகில் வந்துகொண்டிருந்த அதிரடிப் படையினரின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு வந்தன ...
நமக்கு வந்த சேதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் கும்பல் இதுதான்...
சுட்டுத் தள்ளுங்கள்...!
படகினுள் —
யாரோ நம்மை தொலைவிலிருந்து கண்காணித்துக் கொண்டிருப்பதாக என் உள்ளுணர்வு எச்சரிக்கிறது...
துப்பாக்கி விசையை இழுக்கும் விரல்களில் அரிப்பெடுக்கிறது ... இது நல்ல சகுனமல்ல
தேவையில்லாமல் அலட்டிக் கொள்கிறீர்கள்... தோழர்களே!
அதிரடிப்படையின் வருகைப் பற்றி அறிந்திருந்தான் அந்த



படகின் இயந்திர பகுதி தூறி வைக்கப்பட்டது...!
டம்! டமால்!
படகை ஓட்டி வந்தவர்கள் செத்துவிட்டிருப்பார்கள்... பற்றிக் கொண்டு விட்ட தீயை அணைக்க நம்மாலாகாது... நீரினுள் குதித்து விடுவது தான் உயிர் பிழைக்க ஒரே வழி
பொறுங்கள்... மாலோ... எங்கே... காணோம்?
சே... நீங்கள் வந்து தொலைப்பதற்கு முன் சிறைச்சாலையினுள் அக்கடா என்று பாதுகாப்பாக இருந்தேன்...!
ஏற்கனவே படகிலிருந்து வெளியேறி விட்டான் அந்த பெருச்சாளி!


மற்றவர்களும் நீரினுள் பாய்ந்தனர்...
அதிரடிப் படையினரின் திறமைக்கு இது ஒரு சவால் ...!
ஆபத்து இன்னும் ஓய்ந்தபாடில்லை...
இயந்திர துப்பாக்கி நீரினுள் மூழ்கி நீந்துங்கள்!
நீரோட்டத்தின் வேகத்தால் நால்வரும் சீக்கிரமே பிரிந்து விட்டனர்...


அத்தியாயம்-4
கனமான துப்பாக்கியை இன்னமும் கையிலேயே வைத்துக் கொண்டிருந்த மெக்கன்ஸியை நீரோட்டம் தன் போக்கில் இழுத்துச் சென்றது...
உ ...ப்ப்!
இறுதியில் ஒரு வழியாக கரையேறினர்...
துப்பாக்கியை உலர வைப்பதை முதல் முயற்சியாக மேற்கொண்டார்...
என்னை பாதுகாத்துக் கொள்ள கைவசம துப்பாக்கி ஒன்று தயார நிலையில் இல்லாத போது என் சக்தி முழுவதும் வடிந்து விட்டது போல் பிரமை ஏற்படுகிறது...
திடீரென்று அவருக்குப் பின்னால் சலசலப்பு கேட்டது...
யாரோ அல்லது ஏதோ என்னை நோக்கி வருவது போல் தோன்றுகிறது...!



புதர் போல் மண்டிக் கிடந்த செடி கொடிகள் சற்றே விலகி விரிய அதன் வழியே வெளியேறிப் பாய்ந்தது ஒரு பயங்கர மிருகம்!
கர்கர்
மின்னல் வேகத்தில் துப்பாக்கியை இயக்கினர் மெக்கன்ஸி... சரமாரியாக வெளிப்பட்ட தோட்டாக்கள் இலக்கை சரியாக சென்றடைந்தன...
டுமீ!
அந்தக் கானகத்தில் பயங்கரமான கொடிய விலங்குகள் நிறைய இருந்தன என்பது வாஸ்தவம்தான்...
...ஆனால் மனித உருவில் நடமாடிக் கொண்டிருந்த 'இந்த' மிருகங்களோடு ஒப்பிட்டால் அவை எல்லாம் ரொம்ப சாதாரணம்...


மெக்கன்ஸி சுதாரித்துக் கொள்ளுமுன் எதிரிகள் முந்திக் கொண்டு விட்டனர்...
ஆஆஆ...வ்!
ணங்!
அவருக்கு சுயவுணர்வு திரும்பிய போது—
நம் பிரதேசத்தினுள் உத்தரவின்றி ஊடுருவத் துணிந்த அற்பப் பயல் இவன்தானா...?



டெஸ்மாண்ட் கிங்கை முதன் முதலாக நேருக்கு நேர் பார்க்க மெக்கன்ஸிக்கு கிடைத்த அந்த வாய்ப்பு மகிழ்ச்சி யூட்டுவதாக இல்லே...
என்னோடு பேச உனக்கு அனுமதி வழங்குகிறேன் — நீயும் உன் தோழர்களும் என்ன நோக்கத்தோடு இங்கே வந்திருக் கிறீர்கள்?
மெக்கன்ஸி வாயைத் திறப்பதாக இல்லே...
ஓ...கே... பேச மாட்டாயா? இன்னொரு வாய்ப்புக் கொடுக்கிறேன்— பிறகும் மௌனம் சாதித்தாயோ மரணத்தை வரவேற்கத் தயாராகி விட்டாய் என்று அர்த்தம்...!
பாறையின் விளிம்பில் தள்ளாடி நின்றது அந்த சக்கரம்...
ம்ம்... பேசு! இல்லேயேல் மீதமிருக்கும் கயிறுகளேயும் துண்டித்து விடுவேன்!
உன் இஷ்டப்படி என்ன வேண்டு மானாலும் செய்து கொள்ளடா பைத்தியக் காரா...!


சதக்!
என் பொறுமையை ரொம்பவும்தான் சோதித்து விட்-டாய்— அதற்குரிய பரிசு ...இதோ!
சக்கரம் நகர்ந்து பாறையிலிருந்து கீழே உருண்டது...
கட கட கட கட
இதுதான் என் முடிவா...? ஹீம்—கையில் துப்பாக்கி கூட இல்லே!
தன்னைச் சுற்றியுள்ள அனைத்தும் தட்டாமாலே சுற்றுவது போல் ஒருகணம் உணர்ந்த மெக்கன்ஸி பின்னர் மயக்கமடைந்தார்...
எங்கள் ஆட்சிக்கு சவால் விடும் விஷமிகளே— அழிந்து போங்கள்!


சட்டென்று விதி மெக்கன்ஸியை சற்று கருணையோடு பார்த்தது...
சக்கரத்தை அந்த மரம் தடுத்து நிறுத்தி விட்டது...
போகட்டும்... விடு! அதன் வேர்கள் ஏற்கனவே பிடுங்கிக் கொண்டு விட்டன பார்— அவனுடைய மரணம் சற்று ஒத்திப் போடப் பட்டிருக்கிறது... அவ்வளவுதான்!
டமால்!
இதற்கிடையே, சற்றுத் தொலைவில் கிங்கின் வேறொரு குழுவினரிடம் அகப்பட்டுக் கொண்டு திணறிக் கொண்டிருந்தான் லாயிட்...
உலக சாதனையை முறியடிக்கும் வேகத்தில் நான் ஓடிக் கொண்டிருக்கிறேன்— இம்மாதிரி விவகாரங்கள் எனக்கு ஒத்து வராது என்று நினைக்கிறேன்
ரட் ரட் டட்டட!
ஒரு திறந்த வெளி பகுதியை வந்தடைந்த எதிரிகள் திகைத்தார்கள்...
எங்கே போய்த் தொலைந்தான்...?
எச்சரிக்கையோடு இருங்கள்— எந்த விநாடியும் விபரீதம் நிகழக்கூடும்!


அடுத்து நடந்த நிகழ்ச்சி அவர்கள் கொஞ்சமும் எதிர்பாராத ஒன்றாகும்...
டார்ஜான் வேலைகளும் எனக்கு அத்துபடி... தம்பிகளா!


மினி — வெடி குண்டுகள்... இதோ!
டும்! டமால்!
ஆ ஆ...!
டமால்!
எப்படி நம்ம சாகஸம்...? ஒட்டு மொத்தமாக எல்லோரும் அம்பேல்...!
தொலைவில் ஒரு துப்பாக்கி தன்னை குறிவைத்துக் கொண்டிருப்பது தெரிந்திருந்தால் லாயிட் இப்படி துள்ளிக் கொண்டிருக்க மாட்டான்


அங்கே—
துப்பாக்கியின்
விசையை இழுக்க
தயாராக இருந்தது
ஒரு விரல்...
மறுகணம்—
ஆ-ஆ...ஹ்!


இவனை இழுத்துக் கொண்டு போய் கிங்கின் முன்னால் கிடத்தினால் வெகுவாக நம்மைப் பாராட்டுவார்...
இவனையும் சேர்த்து கைதிகளின் எண்ணிக்கை இரண்டாயிற்று...!
சில நிமிடங்களுக்குப் பின்...
இதோ இன்னொரு ஆசாமியையும் பிடித்து வந்திருக்கிறோம்... அரசே!
அப்படியானால்... அவனையும் இங்கே கொண்டு வாருங்கள்— இருவரும் சேர்ந்தே சாகட்டும்...
அதன்படி...
இருபது நிமிட இடைவெளிக்குப் பின் மெக்கன்ஸிக்கு சுயவுணர்வு திரும்பியது...
ஆ... இன்னும் உயிரோடுதானிருக்கிறேனா!
அப்படி சந்தோஷப்படும் படியான சூழலில் நாம் இப்போது இல்லை என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன் தோழரே!



கீழே நெளியும் பாம்புகள் கொடிய நச்சுத் தன்மை கொண்டவை என்பதில் வேறுபட்ட கருத்து இருக்க முடியாது... அதுமட்டுமல்ல... மேலே இருக்கும் கோடாரிகள்... கீழே கவிழ்ந்தாலும் மரணம் உறுதி!
ஆனாலும் கவலைப்படாதே... நம் தலைவர் இன்னும் எங்கோ சுதந்திர மாக இருக்கிறார் என்பதால் நாம் தப்பிப்பிழைக்க ஒரு வாய்ப்பு இருக்கிறது!
காப்டன் ஜான் வெஸ்ட் கிங்கின் ஆட்களுடைய பார்வையில் படாமல் ஒருவாறு பதுங்கிக் கொண்டுவிட்டார்...
ஏதாவது அசம்பாவிதமாக நிகழ்ந்து விட்டால் அவசர சந்திப்புக்கு நிர்ணயிக்கப்பட்ட இடம் சில மைல் தொலைவில இருக்கிறது. அங்கே சென்றால் ஒரு வேளை என் சகாக்களை நான் சந்திக்க முடியும்!
கீர்ர்ர்ர்!
அந்த குன்றை கடந்து விட்டேனென்றால் நான் சென்றடைய வேண்டிய இடத்தை நெருங்கி விட்ட மாதிரி தான்— அட ...அதென்ன இரைச்சல் ...?


விர்ர் ர்ர்ர்ர்!
ஆயுத அமைப்புகள் கொண்ட ஹெலிகாப்டர்!


டுமீல்!
ஆவ்... மயிரிழையில் தப்பினேன்...!


விடாமல் துரத்தி வருகிறதே... எதாவது தந்திரம் செய்தாலன்றி தப்பிக்கவே முடியாது!


அதிக நேரம் இப்படியே தாக்குப் பிடிக்க முடியாது!
ஆவ்...!
வீழ்த்தி விட்டோம்...! கீழே இறக்கு— அவனுடைய உடலை சேகரித்துக் கொண்டு போகலாம்...!
ஆனால்—
என் பாசாங்கு பலித்து விட்டது— கிட்டே வாருங்களடா முண்டங்களா... காப்டன்... ஜானே புரிந்து கொள்வீர்கள்!


ஏற்கனவே உயிர் போகாதிருந்தாலும் இதோ இப்போது நொடியில் போய் விடப் போகிறது!
செத்து விட்டான்...!
அப்படியெல்லாம் சலபத்தில் போய் விடுகிற உயிர் அல்லடா இது!
ஆ...! இ... இது —
அஹ்...!


ஆனால் அவரை குறி வைத்து சில துப்பாக்கிகள் தொடர்ந்து இயங்கத் தொடங்கின...
டுமீல்!
வெடி குண்டை வீச இதுவே தருணம்!
டுமீல்!
மறு விநாடி...
ஆ..ஆ...!
டுமீல்!
இந்த ரவுண்டில் வெற்றி ஈட்டி விட்டேன்... ஆனால் இன்னமும் ஆட்டம் முடியவில்லை என்று நினைக்கிறேன்.
சந்திப்பு இலக்கை நோக்கி இனி நடக்க வேண்டியது தான்.



ஒரு வேளை நால்வரும் பிரிய நேரிட்டால் மீண்டும் இந்த இடத்தில் சந்தித்துக் கொள்வது என்று முன்பே தீர்மானித்துக் கொண்டிருந்தனர்.. ஆனால் ஜான் அங்கே நெடு நேரம் காத்துக்கொண்டிருந்தும் பயனில்லை...
மற்றவர்களை காணோமே— அவர்கள் ஒன்று கொல்லப் பட்டிருக்க வேண்டும் அல்லது சிறைப்பிடிக்கப்பட்டிருக்க வேண்டும். அவர்களுக்கு என்னதான் நேரிட்டது என்று கண்டறிய வேண்டும் நான்!
தொலைந்து போடா...! எங்களை வெட்டிப் போடுவதானாலும் விஷயத்தை வெளியிட மாட்டோம்—புரிந்து கொள்!
ச்சூ...ச்சூ... பாவம் உன் நண்பன் — உன்னுடைய ஆணவப் பேச்சுக்கு தண்டனை யாக தன்னுடைய ஒரு காதை இப்போது இழக்கப் போகிறான்!
அங்கே—
இங்கே ரொம்ப நேரமாக இப்படியே கிடக்கிறோமே? இன்னும் எவ்வளவு நேரத்துக்கு இந்த நிலையோ?
சும்மா அலட்டிக் கொள்ளாதே! இன்னமும் உயிரோடு இருக்கிறோமே அதை எண்ணி ஆனந்தப்படு!
நீங்கள் விஷயங்களை வெளியிட தொடர்ந்து மறுத்தால் அதிக நேரத்துக்கு உயிரோடு இருக்க மாட்டீர்கள்...!
உங்களை யார் அனுப்பியது— எதற்காக? இந்த விபரம் உடனே தெரிந்தாக வேண்டும்!


இதற்கிடையே அங்கே ஜான் வெஸ்ட்டை வேறொரு தொல்லை எதிர் கொண்டது...
குண்டு வீசும் போர் விமானம்... தாழப் பறந்து வருகிறது —என்னைத் தேடித்தானோ?
ஜானின் யூகம் முற்றிலும் சரியே—
அதோ... அங்கே போய்க் கொண்டிருக்கிறான்!
குண்டுகளை போடுங்கள்!
நேபாம்!
நெருப்பு குண்டுகள்!


கீழே இருந்த அனைத்தும் தீப்பற்றிக் கொண்டு எரியலாயின...
அதிர்ஷ்டவசமாக நேரடி இலக்கிலிருந்து சற்று விலகி இருந்த ஜான் தாக்குதலுக்கு ஆளாகாமல் தப்பிவிட்டார்... ஆனால் மூச்சு திணற வைக்கும் புகைமண்டலம் அந்தப் பிரதேசம் முழுவதும் பரவியது
அ...ஹ்ற...லொக்... லொ...க்— சே... மூச்சு விட முடியாமல் திணற லெடுக்கிறது!
இதோ... விழுந்து கிடக்கிறான்!
மூன்றாவது பயல்?
இம்முறை ஜான் வெஸ்ட் பாசாங்கு பண்ணிக் கொண்டிருக்கவில்லை... நிஜமாகவே பாதிக்கப்பட்டு விழுந்து கிடந்தார்...


நமக்கு எதிராக அனுப்பப் பட்டவர்களில் மூவர் அகப்பட்டுக் கொண்டு விட்டார்கள்...
நீங்கள் பேச மறுத்தால் அணு அணுவாக சித்திர வதை செய்து கொல்லப் படுவீர்கள் என்பதை மீண்டும் நினைவூட்டுகிறேன்.
எங்கள் கேள்விக்கு பதில் சொல்ல மறுத்தால் மேலே உள்ள கோடாரிகள் கவிழும்... இருவர் உடனே செத்துப் போவது உறுதி... மூன்றுவது நாய் மெள்ள சாகடிக்கப்படுவான்!
அடேய் சண்டாளா... உன் கேள்விகளுக்கான பதில்களை நான் செல்கிறேன்— கேட்டுக் கொள்! பிரிட்டிஷ் அரசு எங்களை அனுப்பியது— சட்டத்தை கையிலெடுத்துக் கொண்டு மனம் போன போக்கில் வெறித்தாண்டவ மாடுகிற உன்னை தீர்த்துக் கட்ட!... உனக்கு ஏற்-கனவே மரண தண்டனை வழங்கப்பட்டு விட்டது அப்பனே...!
ஆக்ரோஷமாக கத்தினர் ஜான் வெஸ்ட்...


ஓகோ... என்னை— இந்த பிராந்தியத்தின் ஏகபோக ராஜாவை— அச்சுறுத்து மனவுக்குத் துணிந்து விட்டாயா? அற்பநாயே—இப்—போதே உன்னைக் கொல்லப் போகிறேன்!
அரசே...!
தயவு செய்து அவனை இப்போது கொல்லாதீர்கள்— நாலாவது நபரையும் பிடித்த பின் நால்வரையும் ஒட்டு மொத்தமாக தீர்த்துக் கட்டுவது தான் நல்லது!
ஆ...!
அயோக்கிய ராஸ்கல்... எனக்கா யோசனை சொல்கிறாய்?
அடுத்து— நீ...!


ஆனால்—
ஹீம்... அதிர்ஷ்டக்காரன் நீ— தோட்டா தீர்ந்து போய் விட்டிருக்கிறது— எந்த விநாடியும் கொல்லப் படலாம் என்ற மரண அவஸ்தையை கொஞ்ச நேரம் அனுபவித்துக் கொண்டிரு— பிறகு சந்திக்கிறேன்...!
நாம் மேற்கொண்டிருக்கும் இந்த முதல் பணியே நம் கடைசி பணியாகி விடுமோ என்று அஞ்சிக் கொண்டிருந்தேன்... லாயிட்— உனக்கு ஒன்றும் ஆகவில்லையே!
இல்லை... நன்றாகத் தானிருக்கிறேன்!
அந்த கிறுக்கன் ஏறத்தாழ என் காதை துண்டித்துவிட்டான்— அல்லது துண்டிக்க முயன்றான்! நான் மட்டும் இந்த சிக்கலி லிருந்து விடுபட்டேனென்றால் பதிலுக்கு அவனுடைய காதை துண்டிக்காமல் விடமாட்டேன்!
இன்னும் ஹென்றி தான் அகப்பட்டுக் கொள்ள வில்லை! அவனுக்கு என்ன ஆயிற்று என்றும் தெரியவில்லையே!
இன்னும் உயிரோடு இருந்தான் என்றால் அதைக் காப்பாற்றிக் கொள்ள விரைந் தோடிக் கொண்டிருப்பான்— இந்நேரம் எல்லையை தொட்டு விட்டிருக்கக்கூடும்!



ஆனால் அந்த பழைய கைதி அப்போது சில மைல் தொலைவில் தான் இருந்தான்... பெரிய ஆபத்து ஒன்றை எதிர் நோக்கியவனாக!
மரத்தின் பின்னே யாரோ வரும் சலசலப்பு கேட்கிறது—என்னைக் குறி வைத்துத்தான் வருகிறார்கள் என்று அஞ்சுகிறேன்!
ஆனால்—
அட... சே— நீ தானா...!
ஆனால் விரைவிலேயே, நிஜமாகவே ஆபத்து அவனைத் தேடி வந்து சேர்ந்தது!
நாளை விடிகாலையில் அந்த மூன்று கைதிகளையும் அரசர் கொல்லத் திட்டமிட்டிருக்கிறார் என்று கேள்விப்பட்டேன்
ஊய்...! நான் தீரன் அல்லதான்— ஆனாலும் நண்பர்களை விடுவித்துக் காப்பாற்றும் பொறுப்பு இப்போது என் தலையில் விழுந்திருக்கிறது!
டெஸ் மாண்டின் ஆட்கள் போன பின் ஹென்றி பதுங்கி பதுங்கி நடந்தான்... பாழடைந்த கிராமம் ஒன்று வழியில் குறுக்கிட்டது...
என் முயற்சிக்கு உதவக்கூடிய ஏதேனும் இங்கே அகப்படக் கூடும்!


இருபது நிமிடங்களுக்குப் பின்— டெஸ் மாண்டின் 'அரண்மனை'க்கு வெளியே...
இன்னும் சற்று இருட்டிய பின் கை வரிசையை காட்ட வேண்டும்...!


அங்கே... என்ன சலசலப்பு— ஏதோ நகருகிறது... அபாய சங்கை இயக்கு!


ஹே... அது வழி தவறி வந்த மானோ வேறு ஏதோ மிருகமோ தான்— அலட்டிக் கொள்ளாதே!
இந்த மாறு வேடம் நன்றாகத்தான் வேலை செய்கிறது...!


...ஹீம்... இந்த சுற்று வேலி கம்பி ரொம்ப உறுதியானதாக இருக்கிறதே!



இப்படி கதாநாயகனுக்குரிய தோரணையோடு சாகஸங்களில் ஈடுபடுவது முன்னாள் கைதியான ஹென்றிக்கு வாழ்க்கையில் இதுவே முதல் அனுபவம்
பாண்ட்டை சுருட்டி மேலேற்றினன்...
முன்னேற் பாடாக தயாராகத்தான் வந்திருக்கிறேன்...!
...இது ஒரு பிரச்னையே அல்ல!
வேலியில் வழியை உண்டு பண்ணிக் கொண்ட ஹென்றி உள்ளே நுழைந்து பதுங்கி நடந்தான்
தோழர்கள் இன்னும் உயிரோடு இருந்தால்இங்கே தான் எங்கோ இருக்கக்கூடும்!
அதோ இருக்கிறார்கள்— ஆனல்... ஆபத்தான சூழலில்!


அடுத்தடுத்து வீரர்கள் அந்த பகுதியில் காவல் சுற்றி வந்து கொண்டிருந்தனர்...
இவனை குறி வைத்து பாய வேண்டும்...?
வன்முறையில் எனக்கு நம்பிக்கை கிடையாது...
ஆனால் தவிர்த்துக் கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில்...
...அது அவசிய மாகி விடுகிறது!
அஹ்...!
கொஞ்ச நேரம் கழித்து—
என்ன செய்கிறாய்...?
ம்ம்... வந்து— கைதிகளை 'செக்' பண்ணப் போகிறேன்!



நச்சுப் பாம்புகள் நிறைந்த அகழியை கடந்து சென்ற 'காவலாளி' — ஹென்றி தான்!
அம்மாடி யோவ்...!
நாயே ... இப்படி உதைத்தே உன்னை கொன்று விட வேண்டும் போலிருக்கிறது எனக்கு!
அஹ...!
நடிப்பு தத்ரூபமாக இருக்க வேண்டுமல்லவா!
பேடிப் பயலே ..! உன்னை —
...காப்டன் இன்னும் என்னைத் தெரியவில்லையா — ஹென்றி வந்திருக்கிறேன்... அந்த பூட்டுக்களை இப்படி காட்டுங்கள்;— நோட்டமிடுகிறேன்!


ப்பூ... மியூஸியத்தில் இருக்க வேண்டிய பீற்றல்கள்— இரண்டே விநாடிகளில் திறந்து விடுவேன்!
தைரியமாக எப்படி நீ இங்கே எதிரிகளிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் வந்து சேர்ந்தாய்?
என்ன செய்வது...! உங்-களுடைய ஒத்தாசையில்லாமல் இந்தப் பிராந்தியத்தை விட்டு உயிரோடு வெளியேற முடியாது என்று உறுதியாகத் தெரிந்தது— துணிந்து வந்து விட்டேன்!
வீரர்கள் காவல் சுற்று வருகிறார்கள்... வாழ்வா— சாவா என்பது முதற்கட்டமாக இவர்களை வெற்றி கொள்வதில் தான் இருக்கிறது என்பதை நினைவில் கொண்டு, ஆக்ரோஷமாக தாக்க தயாராகுங்கள் தோழர்களே


அவர்கள் நம்மை பார்த்து விட்டால் தொலைந்தோம்!
நிலைமையை சமாளிக்க இப்போது நாம் கையாள வேண்டிய ஒரே யுக்தி— இறந்து விட்டவர்களாக நடிப்பது!
சில கணங்களுக்குப் பின்—
என்ன நான் நடக்கிறது அங்கே? மூன்று கைதிகளையும் கொன்று விட்டான் போலிருக்கிறது!
தப்பிக்க முயன்றிருப்பார்களோ?
காம்ரேட் . என்ன காரியம் செய்துவிட்டாய்? இவர்களை நீ கொன்றுவிட்ட சேதி அறிந்தால் அரசர் கொதிப்படையக்கூடும்!
ஹேய் . அசைவு தெரிகிறது— அவர்களிடம்!


செத்துப்போய் விட
வில்லையடா.. நாங்கள்!
அஹ்ற!
வாட்?
ஹோய்!
சத்த்!!
ஆ!
ஒரு சிப்பாயைத் தூக்கி குழியி
னுள் எறிந்தான் மெக்கன்ஸி ..
ஜான் வெஸ்ட்டும், லாயிடும் வேறு இரு
சிப்பாய்களை தீர்த்துக் கட்டினர்
முஷ்!!
பாப்..பா ப்.
பாம்பு – ஆ !
ஏன் அலறுகிருய் இப்படி?
உங்களுடைய வளர்ப்புப்
பிராணிகள்தானே அவை-
உப்ப்ப் !
இனி நீ தூங்கப்போக
லாம் - நிரந்தரமாக!
ஆவ்!


மிச்சமிருந்த ஒரே ஒரு சிப்பாய் பிரச்சனையை உருவாக்க முயன்றான்...
கயிற்றை வெட்டப் போகிறான்— ஆபத்து!
அவனை கணக்குத் தீர்க்க வேண்டிய பொறுப்பு உன்னுடையது, ஹென்றி!
கயிறு அறுந்ததும் ராட்சஸ கோடாரிகள் தோழர்களை நோக்கி மின்னல் வேகத்தில் இறங்கின...
ஜாக்கிரதை!
சரக்!
சத்தக்!
ஊய்... ய்ய்
என்ன சேஷ்டை இது தம்பி! எனக்கு கோபத்தை உண்டு பண்ணிவிட்டாயே—சே!


வேகம் போதாது . அப்பனே! மின்னல் வேகத்தில் விலகிக்கொண்டு விட்டேன் பார்த்தாயா!
அஹ்!
மெக்கன்ஸி இந்தா இனி பொறுப்பு உன்னுடையது!
ஓ . கவனித்து விட்டால் போயிற்று!
கும்!
ஓ...வ்வ்!
வாருங்கள் நைஸாக நழுவி ஓடிப்போய் விடலாம்! சந்தடி கேட்டு யாரும் எழுந்து கொண்டதாக காணோம்!
சரியான கும்பகர்ணன்கள் போலும்!


அதையடுத்து,காட்டுப் பகுதியில் பத்திரமானதொரு இடத்தைச் சென்றடைந்த னர்...
ஆளை விடுங்கள் ஓடிப் போய்விடுகிறேன்!- என்னைக் கேட்டால் இதைவிட சிறைச் சாலையே தேவலாம் என்பேன்!
மூடு வாயை! நீ செய்த காரியத்தால் நாங்கள் கண்டதுண்டமாகிவிடும் அபாயம் சம்பவிக்கஇருந்தது!
நாம் தப்பிவிட்ட தகவல் தெரிய வந்ததும் நாலாதிசைகளிலும் ஆட்களை அனுப்புவான் அந்தச் சண்டாளன். நாம் முந்திக் கொண்டு அதிரடித் தாக்குதல் நடத்தினால் என்ன?
அருமையான யோசனை! எழுந்திருங்கள்.. போவோம்
கொஞ்சம் பொறுங்கள்! சில சூட்சும ஆயுதங்களை நான் தயாரித்து எடுத்துக்கொண்டு விடுகிறேன்!
அதே வேளையில் அங்கே —
சித்திரவதை செய்து சாகடிக்கப் போகிறேன் அவர்களை...!மற்றவர்களுக்கு இது ஒரு பாடமாக அமைய வேண்டும்!
அப்போது- ஓடோடி வந்தான் ஒரு சிப்பாய்...



மேன்மை தகு பேரரசே... கைதிகள் தப்பியோடி விட்டார்கள்!
என்ன?
நீ கொண்டுவந்த சேதி கேட்டுமகிழ்ந்து போனேன் — இந்தா...பரிசு!
டுமீல்!
ஊப்...ப்
அபாய எச்சரிக்கை ஒலியை எழுப்பு! மிருகங்களை வேட்டையாடுவதுபோல் அவர்களை விரட்டிப்பிடிக்க வேண்டும்!
நாங்கள் உன் அருகிலேயேதான் இருக்கிறோமடா...மடையா!
ம்.. சுடத் தொடங்குங்கள்!


ஆவ்!
ம்..சீக்கிரம்- முட்டாள்களா! என் சாம்ராஜ்யத்தினுள் அத்துமீறி நுழைய துணிந்த நாய்களை வெட்டிப்போடுங்கள்!
ரட்டடடட்ட!
அடேய்...குள்ள நரிப்பசங்களா! உங்களை தோலை உரிக்காமல் விடப்போவதில்லை நான்.
டுமீல்!


இப்போது பாருங்களடா.
என்ன நடக்கிறதென்று!
டமால்!
வெடிகுண்டை வீசுகிறான்
ஜாக்கிரதை!
அதிரடிப் படையினர்
பக்குவமாக பதுங்கிக்
கொண்டு விட்டனர்..
விலகு.. அவனுக்கு
நானொரு சரியான பாடம்
கற்பிக்கிறேன்...
என்னை மிஞ்சிய வெடிகுண்டு
மேதை இங்கே யாரும்
இருக்கமுடியாது!
நிரூபித்துக்காட்டு-
அவனுக்கு!



நான் சற்றுமுன் தயாரித்த தேங்காயை இப்போது சிதறுகாய் போடப் போகி றேன்..
சிதறியது தேங்காய் மட்டுமல்ல- சில உடல் களும் தான்..
பரவாயில்லேயே,..! நான் எதிர்பார்த்ததைவிட கூடு தலாக இருக்கிறதே-பலன்!
டம் டமால்!
தேங்காயை எப்படி வெடிகுண்டாக மாற்றினாய் லாயிட்?
நிஜத்தை நான் சொன்னால் நீங்கள் நிச்சயம் நம்பப் போவதில்லே- சொல்லி என்ன பிரயோஜனம்!
சண்டை விரைவிலேயே ஒருமுடிவுக்கு வந்து விட் டது- அதிரடிப்படையின ருக்கு ஒரு வெற்றியாக!
நாம் பின்வாங்கி விடுவது தான் விவேகம்.. ஸார்!
ரட்டட்!
ஆமாம்.. இப்போதைக்கு அதுதான் சரியான யோசனே!


ஆனால் இங்கிருந்து கிளம்பு முன் கொஞ்சம் தோட்டாக் களை அனுப்பி வைப்போம்!
ஆ.. வ்!
ரட்ட்ட்டட!
ஹா ஆ ஆ!
அந்தக் கிராதகன் லாயிடை யும், ஹென்றியையும் வீழ்த்தி விட்டு தப்பியோடுகிறான்...
ஓடி... வா!
காட்டுப் பகுதியில் பதுங்கியிருப்போம்..... அவர்கள் நம்மைப் பின்தொடர்ந்துவரும் பட்சத்தில் மேலே பாய்ந்துவிடுவோம்!


எதிரியின் படையில் உயிரோடு மீந்து நின்றவர்கள் அதிரடிப்படையினரிடம் சரணடைந்தனர்...
நிலவரம் எப்படி இருக்கிறது ... பாஸ்!
பெரிதாக ஏதுவுமில்லை...ஒரு தோட்டா லாயிடின் தோளை ஊடுருவிச் சென்றிருக்கிறது... இன்னொரு தோட்டா ஹென்றியின் சதையை பிய்த்துக் கொண்டு போயிருக்கிறது- அவ்வளவுதான்!
'அவ்வளவுதான்' என்றால்?- அத்தனை இளப்பமா? ...கொடுமை!


இந்தக் கும்பலை நீயும் ஹென்றியும் கண்காணித்து கட்டுப்படுத்தி வைக்க முடியுமல்லவா? நானும் மெக்கன்ஸியும் அந்த சண்டாளனையும் அவனுடைய மெய்க்காப்பாளனையும் தேடி விரட்டிச்செல்ல உத்தேசித்துள்ளோம்!
எதிரிகளை சமாளித்து விடுவேன் . காப்டன்! ஆனால் இந்தப் பயல் ஹென்றியைத்தான்...
அந்த துஷ்டர்கள் அடிபட்ட நல்லபாம்புக்குச் சமம்? நாம் ரொம்ப ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும் மெக்!
நானே சொல்ல வேண்டும் என்று நினைத்தேன்!
அங்கே கவனித் தாயா...!
வயர் ஒன்று தொங்குகிறது- முனையில் வெடி குண்டோடு!
மறுபக்கம்-
டமால்!
அதோ வெடிகுண்டு வெடிக்கிறது! நிச்சயமாக ஒருவன் காலி!
இரண்டாமவனையும் விரைவிலேயே தீர்த்துக் கட்டிவிடலாம்!


அதோ.... இருக்கிருன்-சுட்டுத் தள்ளு!
அருமையான வேட்டை!
எப்படி எங்கள் சூழ்ச்சி... ஹா-ஹா ஹா!
ரட்டட்ட!
ஏமாந்து விட்டோம்-பின் வாங்குங்கள்!
ஹா.. வ்!
ஆனல்-எதிரிகளால் செத்துப்போனவராக நம்பப்பட்ட ஜான் வெஸ்ட் சட்டென்று வெளிப்பட்டார்...
இருவரும் ஓடிச் சென்று ஒரு அடர்த்தியான புதரினுள் பதுங்கிக் கொண்டுவிட்டனர்...
எதிரிகளை குறைவாக மதிப்பீடு செய்துவிட்டோம்! சார்ஜண்ட்-மேஜர் காயம் பலமா?
வெறும் சிராய்ப்புதான்.!



இருவரும் பிரிந்து தனித்தனியாக நின்று தாக்குவோம்!
வெற்றி பெற நல்வாழ்த்துக்கள் அரசே!
இன்னொரு முறை வெறுமனே அரசே என்று சொன்னாயோ கொன்றுவிடுவேன்! நாம் இந்த சாம்ராஜ்ஜியத்தின் ஏகபோக அதிபதி... நம்மை மேன்மை தகு பேரரசே என்றுதான் அழைக்க வேண்டும்... புரிகிறதா?
ஸாரி...ஸார்-அந்தத் தவறு மறுபடியும் ஏற்படாது!
சில நிமிடங்களுக்குப் பின்-
நம் சூழ்ச்சி அவர்களை திகைத்து தடுமாற வைத்துவிட்டது!
பிரிந்து கொண்டார்கள் என்று தோன்றுகிறது!
நாமும் இக்கணமே பிரிந்து கொள்வோம்! ஒற்றைக்கு ஒற்றை ஒரு கை பார்த்து விடலாம்!
அதையடுத்து-
ஊஹூம்...! ஆசாமிக்கு வெறிபிடித்துப் போயிருக்கிறது-இவரோடு இனியும் ஒட்டிக்கொண்டிருந்தால் எந்த விநாடியும் உயிருக்கு ஆபத்து வரலாம். நைஸாக உடனே ஓடிப்போய்விடுவதுதான் புத்திசாலித்தனம்!
அந்த மரத்தின் பின்னால் யாரோ நிற்கிறார்கள். அது யாரென்று அறிய ஒரு வழி இருக்கிறது!


இதோ-
அந்த பைத்தியக்காரன் அல்ல-அவனுடைய — சகா!
இதற்கிடையே... சுமார் 100 மீட்டர் தொலைவில்
விஷ ஊசி! ஓசை எழுப்பாது... ஆனால் விளைவு- விபரீதமாக இருக்கும்!
அவன் குறி வைத்தது காப்டன் ஜான் வெஸ்டின் நெஞ்சை!


தன்னை நோக்கி, ஆபத்து விரைந்து வந்துகொண்டிருப்பதை ஜான் அறிய மாட்டார் ..
தொலைந்தான்... எதிரி!
டிங்!
ஆனால் அதிர்ஷ்டம் ஜான் வெஸ்டின் பங்கில் இருந்தது.
ஹா-எ.. எ... என்ன இது?
விஷ ஊசி!
எனக்கு ஆயுள் கெட்டி-அப்பனே! இந்தா பதிலுக்கு நான் தருவதை நீ வாங்கிக்கொள்!



படீப்படீப்பட்!
சே... தப்பிவிட்டானே! இந்த வெடிகுண்டை வீசிப் பார்ப்போம்!
செத்துத் தொலை!
வெடிகுண்டு!
டமால்!
உன்னைப் போன்று புத்தி பேதலித்தவர்களோடு மோத நேரிடும் வேளைகளில் ஒரு கணம்கூட ஓரிடத்தில் நிலைத்து நிற்பதேயில்லை- உன் வெடிகுண்டின் இலக்கில் நான் இல்லை இப்போது!


தப்பியோட முனைந்த சார்ஜண்ட், மேஜரை துரத்திக் கொண்டு போனான் மெக்கன்ஸி-
எங்கோ வெகு அருகில் என்னை எதிர்பார்த்து அவன் பதுங்கிக் கிடப்பதாக என் உள்ளுணர்வு எச்சரிக்கிறது!
அவருடைய கணிப்பு சரியே-
இன்னும் கொஞ்சம் நெருங்கி வா- மூளையை சிதறடிக்கிறேன்!
ஆனால்-
அப்போது-
பக்கவாட்டில் சலசலப்பு கேட்கிறதே! அவனுடைய சகாவாக இருக்குமோ?
தன்னிச்சையாக அவனுடைய விரல் துப்பாக்கியின் விசையை இழுத்து விட்டது!
சலசலப்புக்கு காரணம் ஒரு காட்டு விலங்கு என்ற உண்மை அவனுக்கு தெரிய வந்த கணத்தில் நிலைமை தலைகீழாகி விட்டது-


சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சட்டென்று மாயமாக மறைந்து விட்ட மெக்கன்ஸி மிக அருகில் நெருங்கி விட்டார் -
சே- அவசரப்பட்டு விட்டேன்!
எங்கே போய்த் தொலைந்தானோ- தெரியவில்லையே?
உனக்கு அருகே நேர் பின்னால் நிற்கிறேன்- துப்பாக்கியை போட்டுவிட்டு சரணடை!
சரணடைவதா? என் அகராதி யிலேயே இல்லாத வார்த்தை யாயிற்றே அது!


சரி. அப்படியானால் வேறொரு வார்த்தை வைத்திருக்-கிறேன் உனக்கு!
ரட்டட்ட!
மரணம்!
ரட்டட்ட!
ஆவ்!
ஒருவன் தொலைந்தான்-இன்னும் ஒருவன் பாக்கி!


அங்கே-
இந்தா இன்னொன்று. இம்முறை நீ தப்பவே முடியாது!
டமால்!
இம்முறையும் விலகிக் கொண்டு விட்டார் ஜான் வெஸ்ட்-
நிலைமை இப்படியே நீடித்தால் ஏதாவது ஒரு குண்டு என்னை சிதறடித்து விடக் கூடும்!
டமால்!
கத்தியை பயன்படுத்திப் பார்க்கலாம்!
அவனைக் காயப்படுத்தி செயலிழக்க வைக்க வேண்டும்!
ஆனால் எதிரி சுதாரித்துக் கொண்டு விட்டான்-
விஷ்ஷ்!
கத்தியை வீசுகிறான்!


சட்டென்று கத்தியை குறி
வைத்தான் வெறியன்-
டுமீல்!
பட் பட்!
உனக்கும் ஒரு தோட்டா
மீதமிருக்குதடா
பயலே!
சைத்தானே!
பாய்ந்து வந்த கத்தியை சுட்டு
சுக்கலாக்கிவிட்டானே- சரியான
எமப் பயல் தான்!
துப்பாக்கியை
நான் கையாள
வேண்டும்
இனி!


ஆனால் திடீரென்று-
கத்தியை கையாளுபவனுக்கு கத்தியாலே மரணம் சம்பவிக்கும்- தெரியுமா உனக்கு?
ஓ- கடைசியில் நாம் நேருக்கு நேர் சந்துத்துக் கொண்டு விட்டோம்- இல்லையா மிஸ்டர்?
எம்மை மேன்மைதகு பேரரசர் என்று மரியாதை யாக குறிப்பிட வேண்டும் நீ. இந்த பிராந்தியத்திற்கு ஏக போக அதிபதி நான்! நீ ஒரு அற்ப ஊடுருவல் பேர்வழி!
பேரரசருக்கு தலைவணங்க விருப்பம்தான்- ஆனால் நான் அப்படி செய்ய முனைந்தால் கத்தி என் குரல் வளையை பதம் பார்த்து விடும் ஆபத்து உண்டு!
வேடிக்கையாக பேசுகிறாய்- முகத்தில் ஒரு புன்னகையோடு உயிரை விட நீ அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டும்!
ஆனால் இப்போது உயிரை விடும் உத்தேசம் எனக்கில்லையே?
சத்!
வாவ்!


ஒரு பேரரசரை இப்படி அடித்து வீழ்த்தவும் முற்பிறவியில் புண்ணியம் நிறைய செய்து இருக்க வேண்டும்!
ஆங்!
கத்தியை வைத்து நீ வேடிக்கை காட்டியது போதும்- இனியும் தொடர்ந்து நீ மோதிப்பார்க்க விரும்பினால் உன் முஷ்டியைத் தான் பயன்படுத்த வேண்டும்!



காட்டு மிராண்டிகள்தான் முஷ்டிப் பிரயோகம் செய்வார்கள்!
ஹா-ஆஆ!
எம்மமைத் தாக்கத் துணிந்தி குற்றத்துக்குரிய தண்டனையை பெறப் போகிறாய் நீ!
ஆ!
சட்டென்று உயிர் பிரிந்துவிடலாகாது- அணு அணு வாக வதைபட்டுச் சாக வேண்டும்- இதோ தொடங்கப் போகிறது!


ஜான் வெஸ்ட்டின் தோளில் ஆழமாகக் கீறினான் அந்தக் கிராதகன்-
ஆஆஆ!
எப்படியிருக்கிறது-ஹாஹ்ஹா! மற்றவர்களுக்கு இது ஒரு பாடமாக அமைய வேண்டும்!
சரியயான கிறுக்கன் நீ என்பது ஊர்ஜிதமாகிறது!


வசைபாடுகிருயா? இனி உன் இஷ்டம் போல் எதை வேண்டுமானுலும் உளறு. இந்தச் சித்திரவதை மரணம் வரை நீடிக்கப் போவது நிச்சயம்!
சவடால் பேச்சிலேயே அவனுடைய கவனம் இருக்கிறது. நான் என் காலணியின் குதியில் விஷமம் செய்வதை கவனிக்கக் காணோம்!
இதோ- அகப்பட்டு விட்டது!
பைத்தியக்காரா- என் கையிலிருப்பது சக்தி வாய்ந்த மினி-வெடிகுண்டு. கத்தியை கீழே போடு!
பொய் பேசுகிருய்- அது உன்னையும் சேர்த்துத் தானே கொல்லும்!
இல்லையென்ருலும் உன்னுல் நான் சாகத் தானே போகிறேன்! புதிதாக எனக்கு எந்த இழப்பும் ஏற்படப் போவதில்லை- இந்தா... எங்கே பிடி பார்க்கலாம்!
டம்-டமால்
ஆ


சட்டென்று துள்ளி எழுந்து ஓட்டம் பிடித்தார் ஜான் வெஸ்ட்-
எங்காவது போய் சற்று ஓய்வெடுக்க வேண்டும்-அத்தோடு இரத்தக் கசிவையும் உடனே நிறுத்தியாக வேண்டும்!
ஆனால்-
மேலே செல்ல வழியில்லை-திரும்பிச் செல்லவும் முடியாது-என்ன செய்யலாம்!
கையில் காயத்தை வைத்துக் கொண்டு இப்படி மலையேறுவது சுலபமான காரியமல்ல தான்-
ஓகோ!
ஆனால் அந்த கிறுக்கனிடமிருந்து தப்பிக்க வேண்டுமே!


உன் மரணத்தை இனியும் ஒத்திப் போடக் கூடாது என்று தீர்மானித்து விட்டேன்.
ஆனால் நான் உன் தீர்மானத்தை ஆமோதிப்பதற்கில்லை. இந்தா-
இன்னொரு வெடி குண்டு!
டமால்!
ஆஐயோ!


இந்த வழியாகத் தான் விழுகிறான்!
எதையாவது பற்றிக் கொண்டு தப்பிக்க துடித்த எதிரியின் கையில் ஜான் வெஸ்ட் அகப் பட்டது அவரது துரதிர்ஷ்டமே!
ஆ ஆ!
அவரும் பிடி நழுவி சேர்ந்து சரியத் தொடங்கினார்.
அட— சனியனே!


பிடி நழுவி விட்டது-
அவனோடு நானும்
சாகப் போகிறேன்!
ஆ-ஆ-நோ!


இருவரும் தலைகுப்புற
இறங்கினர்-
ஆ ஆ!


ஆ-ஆ-!
ஓரளவு சுயவுணர்வுதான் இருந்தது என்ற போதிலும் உடல் தண்ணீரின் குளுமையை உணர்ந்தபோது தன் அதிர்ஷ்டத்தை எண்ணி மகிழ்ந்து போனார் - ஜான் வெஸ்ட்-
ஆனால் எதிரிக்கு அப்படியொரு அதிர்ஷ்டம் கிட்டவில்லை-
பாறையில் மோதிய அக்கணமே அவனுடைய உயிர் பிரிந்து விட்டது-


நீரோட்டத்தின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறினார் ஜான் வெஸ்ட்-
கரை சேர இயலாமலே போய் விடுமோ?
இதற்கிடையே, அங்கே-லாயிடும் ஹென்றியும் எதிரிகளை தேக்கி நிறுத்தி வைத்திருந்தனர்-
தானியங்கி காவல் அமைப்பை நான் பொருத்தி வைத்திருப்பதால் நாம் ஒவ்வொரு கணமும் விழிப்போடு காத்து நிற்க வேண்டிய அவசியம் இல்லை!
ஆனால் ஹென்றிக்கு இவற்றில் எல்லாம் நாட்டமில்லை-
சூட்சும விசைகள் எதிரிகளை நகரவொட்டாமல் தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தன-
இங்கே நான் சுருட்டிக் கொண்ட பொக்கிஷங்கள் வாழ்நாள் முழுவதும் ஜாலியாக கழிக்க போதுமானவை! நகர வாழ்க்கைதான் எனக்கு இஷ்டமானது. அங்கேதான் இப்போது நான் போய்க் கொண்டிருக்கிறேன்!



இந்த விளுடியோடு அதிரடிப்படைக்கும் குட்-பை!
ஆனல்-
எங்கே நழுவுகிறுய்?
அஹ்!
மெக்கன்ஸி குறி வைப்பதில் பலே கில்லாடி-
நீ-நீங்-களா?
ஆமாம்-நாங்கள்தான்! காப்டனை கைத்தாங்கலாக அழைத்துச் செல்ல நீயும் வா-அந்தப் பக்கம்!
பேரரசன் என்று தன்னை பிரகடனப் படுத்திக் கொண்டு அலைந்த அந்த கிறுக்கன் செத்தொழிந்தான்-உனக்கு உயிர் மீது ஆசையிருந்தால் மரியாதையாக நடந்து கொள்!
புரிகிறது-மாக்!


அடுத்த சில தினங்களில் ஜான் வெஸ்ட் குணமடைந்து விட்டார்-
தங்கள் தலைவர் இறந்துவிட்ட சேதி-யறிந்த கும்பல்.சரணடைந்து விட்டது-எதிர்ப்பின்றி! நம் செக்யூரிட்டி பிரிவு அவர்களை கைது செய்து கொண்டு வந்து விட்டது!
ஹென்றி-வா-ஷர் திரும்பலாம்!
ஹைய்யா-!
நம்முடைய முதல் முயற்சி வெற்றி பெற்று விட்டது. அடுத்து எந்த மாதிரியான பணி நமக்காக காத்துக் கொண்டிருக்கிறதோ?
எனக்குப் பிடித்தமான ஒன்றாக அது இருக்கப் போவதில்லை என்பது மட்டும் நிச்சயம்!
முற்றும்.


விச்சு
கிச்சு
இன்னும் கிரிக்கெட் டீமில் ஆடிக்கொண் டிருக்கிறாயா கிச்சு?
கிரிக்கெட்டுக்கு கொஞ்சம் ஓய்வு கொடுத்துவிட்டு, வேறு ஏதாவது ஒரு விளையாட்டை என் திறமையால் சிறப்பிக்க நினைக்கிறேன்!
BOOK OF SPORTS
அப்பாடா கிரிக்கெட் பிழைத்தது!
இதோ கண்ணை மூடிக்கொண்டு இந்த புத்தகத்திலுள்ள ஏதாவது ஒரு விளையாட் டின் மீது கை வைக்கப் போகிறேன்!
சூ- மந்திர காளி!
ஹோய்!
புஸ்தகத்தை ஜன்னலோரமாகக் கொண்டு வா கிச்சு- வெளிச்ச- மாய் இருக்கும்!
அம்மா!
நாயோடு போய் தகராறு பண்ணுகிறாயே கிச்சு!



கையை கடித்துவிட்டதல்லவா? இனி கையைபயன படுத்த வேண்டிய எந்த விளையாட்டையும் நீ ஆட முடியாதே!
அதனுலென்ன? ஹை ஜம்ப்! ஒட்டப் பந்தயம்! ஸ்கேட்டிங் போன்றவற்றை ஆடலாமே! இந்த விளையாட்டுகளின் பெயரை சீட்டுகளில் எழுதி இந்த தொப்பிக்குள் போடு!
ஹேய் கிச்சு! அது என்னுடைய புதுத் தொப்பி- ஜாக்கிரதை!
திடீரென-
கண்ணைக் கட்டிக் கொண்டு எதையாவது தேர்ந்தெடுக்கிறேன்!
திரும்பவும் என் மூக்கை பதம் பார்க்குமுன் ஓடி விடுகிறேன் நான்!
என் தொப்பி போச்சு! உன்னை-
ஹெ! ஹெ! ஹெ! பாவம் கிச்சு! ஹை ஜம்ப்- வேக ஓட்டம்- ஸ்கேட்டிங்- எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் செய்ய வேண்டியதாகி விட்டது!
DANGER
முற்றும்-


ஃபிளைட் 462 லண்டனின் ஹீத்ரோ விமான நிலையத்தை நெருங்கிக் கொண்டிருந்தது- விமான நிலைய கண்ட்ரோல் அறையிலிருந்து தரையிறங்க உத்தரவும் உடனே கிடைத்தது-
ஹை-ஜாக்!
St.AIR
இடப்புறம் ரன்வே எண் 2-8ல் தரை இறங்கவும்!


மிஸ்டர் ரோஜர் தரைக் காற்று சாதகமான வேகத்தில் வீசுகிறது! சிக்கலின்றி தரை இறங்கலாம்!


வெகு கச்சிதமாய் குறிப்பிட்ட ரன்வேயில் தன் சக்கரங்களைப் பதித்தது அவ்விமானம்-


ண்-வெயில் விரைந்து வேகம்குறைந்து ஸ்திர நிலைக்கு விமானம் வந்த போது உள்ளே-
யாரும் சீட்டை விட்டு எழுந்திருக்கக் கூடாது- சுதந்திரப் புரட்சி வீரர்களான எங்களது முழு ஆதிக்கத்திலுள்ளது இந்த விமானம்!
யாரேனும் இடையூறு செய்ய நினைத்தால் என்சகோதரன் எங்களது உந்நத நோக்கத்திற்காக தன் உயிரையும் தியாகம் செய்யத் தயாராயிருக்கிறான்- அவனோடு சேர்ந்து அனைவரும் மடிவது உறுதி!


இதோ அவன் உடல் முழுக்க பயங்-
கரமான வெடிகுண்டுகள்- விசையை
இழுத்தால் ஒட்டு மொத்தமாய்
அனைத்தும் வெடிக்கும்!


அதே சமயம் விமானத்தின் முன் பக்கக்
கண்ட்ரோல் அறையில் உள்ளே நடப்பது
எதுவுமறியா விமானிகள் வெகு குஷியாய்
உரையாடிக் கொண்டிருந்தனர்-
அடுத்து-உனக்கு
என்றைக்கு ட்யூட்டி?
நாளை
மறுநாள் தான்!


அசையாதீர்கள்- விஷமம் செய்தீர்களோ திரும்பவும் நீங்கள் பறக்க முடியாது போய்விடும்- ஏன் சுவாசிக்கும் வேலையே இல்லாது போய்விடும்!
ஏய்- ஏய் யார் நீ?


பிளைட் 462லிருந்து தகவல் எமர்ஜென்சி
எமர்ஜென்சியா? அப்படியானால்- விமானக் கடத்தலா?


மறு விநாடி- அவசர கால நடவடிக்கைகள் முழு வீச்சில் செயல்படத் துவங்கின-
ராணுவப் பிரிவுகளும் போலீஸ் வாகனங்களும் விமான நிலையத்தை நோக்கி விரைந்தன-
POLICE
விமான நிலையத்தில் நான்கு பக்கங்களிலும் வீரர்கள் பாதுகாப்பு அரணாய் சுற்றி நிறுத்தப்பட்டனர்-


விமானத்தின் உள்ளேயோ-
சாமான்கள் வைக்கும் பகுதியில் துப்பாக்கிகளை மறைத்து வைத்-திருக்கின்றனர்- அது எப்படி சாத்தியமாயிற்று?


இதுதான் சந்தர்ப்பம்- முயன்று பார்ப்போம்!


டுமீல்! டுமீல்!


யாரும் எழுந்திருக்கக் கூடாது! எழுந்தால் இதே கதிதான் உங்களுக்கும்!



அதே சமயம் No: 10 டவுனிங் தெருவில் பிரிட்டிஷ் பிரதமர் விமானக் கடத்தலை முறியடிக்க தீர்க்க மான முடிவு ஒன்- றுக்கு வந்தார்-
நமது விசேட அதிரடிப் படை கிளம்பட்டும்!
அடுத்த பதினைந்தாவது நிமிடம், புறப்பட ஆயுத்த நிலை யில் காத்திருந்தது அந்த நால்வர் அடங் கிய அதிரடிப்படை!
இன்னும் சில நிமிடங் களில் நாம் ஹீத்ரோ போய்ச் சேர்ந்துவிடுவோம்!
அப்புறமென்ன- கடத்தல்காரர்களுக்கு கல்லறைதான்!



விமானக் காபின் பகுதியில்-
எங்களை ஏமாற்ற நினைத்தீர்களோ
இந்த வெடிகுண்டுகள் அனை-
வரையும் கூண்டோடு
அழிப்பது உறுதி-
விமான நிலையக் கட்டிடங்களின்
சமீபத்திலிருக்கிறோம். விமானத்
தை தொலைவில் கொண்டுபோய்
நிறுத்த உத்தரவிடச் சொல்!




கேப்டன் விமானத்தைக்
கொண்டுபோய் தள எண்
23ல் நிறுத்தவும்-
இதோ கிளம்பி
விட்டோம்!


அதே சமயம் ஹெலிகாப்டரில் வந்து கொண்டிருந்தது அதிரடிப்படை!
நெருங்கி விட்டோம்- எல்லாம் தயார்தானா?
'திடும்'மென உள்ளே நுழைந்து படபடவென சுட்டுத்தள்ள வேண்டியது தான் அந்தப் பயங்கரவாதிகளை!


எறிகுண்டுகள் ஏராளமாய் உள்ளது என்வசம்-விரும் பினார்களென்றால் வாண- வேடிக்கையே நிகழ்த்திக் காட்டலாம்!
பொருள்களுக்குப் பொ றுப்பாளனான இந்த ஹென்றியும் தயார்!


அடுத்த சில நிமிடங்களில் -
வாருங்கள், ஸார்.
மீட்புப் பணியின் முழுப் பொறுப்பினையும் தாங்கள் ஏற்றுக் கொள்ள விருப்ப தாய் பிரதமரிடமிருந்து செய்தி வந்தது எனக்கு.

கடைசியாய் இறங்கிய ஹென்றியின் இறங்கல் வேடிக்கைச் சம்பவ மாய் அமைந்தது -
ஈஈஈஈ!


ஊப்ப்! !
தொப்!


நமக்கு எதிர்பாராத ஒரு சிறு வாய்ப்பு கிட்டியுள்ளது.. கடத்தல்காரர்கள் விமானத்தை கட்டிடங்களுக்கு அப்பால் கொண்டுபோய் நிறுத்தக் கோரினர். அதனைச் சாதகமாய்க் கொண்டு தள எண் 23ல் விமானத்தை நிறுத்த ஏற்பாடு செய்துவிட்டோம்!
அப்படியானால் வசமாய் மாட்டிக் கொண்டார்கள்!


திடீர்த் தாக்குதல்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்கிறோம் என்பது அவர்கள் நினைப்பு!
அது தவறான கருத்து என்பதைப் புரிய வைப்போம்!
அதே சமயம்-
விமான நிலைய கண்ட்ரோல் அறைக்குச் செய்தி-உங்களது பிரிட்டிஷ் தேச குயுக்தி வேலைகளை நாங்கள் அறிவோம்-கடத்தல்காரர்களுக்கு அடிபணியமாட்டீர்கள். அதே சமயம் பேச்சுவார்த்தையை முறிக்கவும் மாட்டீர்கள். ஆனால் உங்களது இந்தக் கில்லாடித்தனம் எங்களிடம் செல்லாது! இன்னும் ஐந்தே நிமிடத்தில் பயணிகளின் உயிர் பறிக்கும் வேலை துவங்கிவிடும். ஒரு நிமிடத்திற்கு ஒரு நபர். எங்களது நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளப்படும் வரை அது தொடரும்!



உங்களது நிபந்தனைகள் என்னவென்றுதான் கூறுங்களேன்!
கடத்தல் குற்றங்களுக்காக ஏற்கன வே தண்டிக்கப்பட்டு சிறையிலிருக் கும் ஆறுபேரை உடனே விடுதலை செய்ய வேண்டும் அவர்கள் எங்கள் இயக்கச் சகோதரர்கள்! திரும்பப் பெற விரும்புகிறோம்!
பிரதமரிடமிருந்து செய்தி- உடன்படிக்கை வேண்டாம்- மீட்புப் பணியில் இறங்க உத்தரவு!
அந்தச் செய்திக் குத்தான் காத் திருந்தேன்!


கடத்தல்காரர்களின் பிடியில் இருந்த அந்த ஜெட் விமானம் திறந்த வெளி யின் நடுவே நின்றிருந்தது-திடீர்த் தாக்குதலுக்கு சாதகமற்ற சூழ்நிலை என்று கருதத்தக்க தோற்றம்-


ஆனால் விமானத்தில் கீழேயோ-


பிரத்யேகமான சுரங்கப்பாதை ஒன்று இத்தகைய சம்பவங்களை எதிர்பார்த்தே தள எண் 23ன் கீழ் அமைக்கப் பட்டிருந்தது!
உம்ப்!
உஷ்-சத்தம்!


ஓ.கே. லாயிட்-
வெடி வளையத்தை
தயார் செய்!
சில விநாடி நேரம்
அவகாசம் தேவை
பாஸ்!


பூ வளையம் போல்
கையாள வேண்டும்!
இந்த ரௌடிக் கும்பலிலிருந்து
வெகு சீக்கிரம் கழட்டிக் கொள்ள வேண்டும்!


அங்கே மேலேயோ-
ஹேர- கடத்தல் கூட்டத்தை சேர்
ஜன்னல் வழியே வெளியே பார்
என்னை கவனித்து விட்டானென்
ஆபத்துதான்- பயணிகள் அனைவரையும்
கொன்று குவித்து விடுவான்!


லாயிட் அவன் பார்வையில் பட்டு விடக்கூடாது!


அதிர்ஷ்டம் அவர்களுக்கு சாதகமாகவே அமைந்தது.
முட்டாளே- வெளியே என்ன வேடிக்கை? விமானத்தினுள் கண்காணிப்பது உன் வேலை! புரிகிறதா?
ஸாரி- பாஸ்!
கச்சிதமாக முடித்து விட்டேன்!
வெரிகுட்! அடுத்து ஹென்றி- பூட்டுகளைத் திறக்கும் நிபுணனை நீ இந்தச் சரக்குப் பகுதி கதவினைத் திறக்க வேண்டும். ஓசை கூடாது- ஒரே நிமிடத்தில் முடிய வேண்டும்!
எளிது- மிக எளிது!


அண்டாகாகஸம்-
அபுகாகஸம்


திறந்திடு
ஸீஸே!
போதும் வேடிக்கை- உள்ளே அப்பாவிகள்
பலரின் உயிர் பேராபத்திலிருக்கிறது!


ஒரு சிறு சத்தம் கூட கேட்கக் கூடாது- நமது அத்தனை முயற்சிகளையும் குட்டிச் சுவராக்கிவிடும்!
சரக்கு அறையினுள் புகுந்த அவர்கள் ஊர்ந்தவாறே விமானத்தின் முன் பகுதிக்கு வந்தனர்-
நாம் இப்போது பைலட் அறையினை ஒட்டி வந்துவிட்டோம்!



விமானியின் அறையில்-
பதட்டம் வேண்டாம் நண்பரே கைக்குண்டுகளின் மீதிருக்கும் கையைத்தான் கொஞ்சம் தளர்த்துங்களேன்!
கோழைப் பசங்களா - என் உன்னத நோக்கத்திற்காக உயிரை விடுவதில் நான் பெருமைப்படுவேன்!
நீங்கள் வீணாய் வம்பை விலைக்கு வாங்காதீர்கள்- ஜாக்கிரதை!
இதோ பயணிகளை ஒருவர்பின் ஒருவராக கொல்லப் போகிறோம். எங்கள் நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளப்படும்வரை கொலை தொடரும்!


ஒரு மணிக்கு அறுபது பயணிகள் மடி-வார்கள். அனைவரும் கொல்லப்பட்டபின் உங்கள் மூவருக்கும் வித்தியாசமான மரண தண்டனை. கொஞ்சம் கொஞ்சமாய் உயிரைப் பறிப்போம்!
ஆஹா! சரக்கு அறைத் திறப்பின் பின்னிலிருந்து யாரோ ஒரு நபர் வருகிறார். இவனது கவனத்தைச் சற்று திசை திருப்புவோம்!


தயவு செய்து என்னை விட்டுவிடுங்கள்- இந்தப் பணம் முழுவதையும் எடுத்துக் கொள்ளுங்கள்!


பைலட் நல்ல புத்திசாலி. கடத்தல் காரனின் முழுக் கவனத்தையும் ஈர்த்துக் கொண்டு விட்டான்!


இந்த விநாடி நேரம் என் வேலைக்குப் போதும்!


வாங்கிக்கொள் இதை!


மின்னல் வேகத்தில் செயல்படும்
மயக்க மருந்து அது!
கீழே விழாமல்
பிடியுங்கள்
அவனை!


ஒரு நிமிடம் நானே ஏமாந்துபோய் விட்டேன்!
உதவிக்கு வந்திருக்கும் நண்பர்களே, வாருங்கள்- என் கோழைத்தன நடிப்பு உங்களைக் கவர்ந்திருக்குமென நம்புகிறேன்!
அற்புதமான, அவசியமான நடிப்பு!


உள்ளே மேலும் மூன்று பேர் ஆயுதபாணிகளாய் உள்ளனர்!
இந்த அதிர்ச்சித் தாக்குதல் தொடர்ந்து நமக்கு கைகொடுக்காது- விரைவில் நாம் இறுதித் தாக்குதலில் இறங்கியாக வேண்டும்!


உள்ளே மற்றைய மூவரும் என்ன செய்து கொண்டிருக்கின்றனர்!
விபரீதத்திற்கு தயாராகி விட்டனர் எனத் தெரிகிறது!


மூவரும் சம இடைவெளியில் பிரிந்து நிற்கின்றனர். உடல் முழுக்கக்குண்டுகளைப் பொருத்தியிருக்கும் தடியன் மறு கோடியில் நிற்கிறான்!


நாம் விடுத்த வேண்டுகோளுக்கு இதுவரை எவ்வித பதிலுமில்லை! நாம் எத்தகையவர்கள் என்பதை அவர்களுக்கு உணர்த்துவோம். மரண தண்டனையை தொடங்கி வைப்போம். முதலில் சாவை தழுவப் போவது யார்?


வழுக்கைத் தலையா - எழுந்திரு!
வே-வேண்டாம் விட்டு விடு. என்னை!


அங்கேயோ-
வேளை நெருங்கி விட்டது நண்பர்களே- தாக்குதலுக்கு தயாராகுங்கள்!
மயக்க வாயு குண்டுகளை வெடிக்கச் செய்வேன்!


தங்களது திடும் பிரவேசத்தை முக்கிய ஆயுதமாய் பயன்படுத்திக் கொண்டனர் அதிரடிப் படை வீரர்கள்-
பிரிட்டிஷ் அதிரடிப்படை வீரர்கள் நாங்கள்- பயணிகள் அனைவரும் தரையில் படுத்துக் கொள்ளுங்கள்!


இது மீட்பு முயற்சி! குண்டுகளை -


கைத்துப்பாக்கி ஏந்திய கொடியவன் தன் வார்த்தையை முடிக்கு முன் அதிரடிப் படையினரின் மயக்க வாயு குண்டுகள் பெரும் ஓசையுடன் வெடித்தன.
டமீர்!
டமால்!


அதே விநாடியில் கடத்தல்
காரன் ஒருவன் கேப்டன்
ஜான் வெஸ்ட்டின்
குண்டுக்கு இரையானான்-
டுமீல்!
ஆ· அஹ்ர!


சீக்கிரம் சகோதரரே- உங்கள் குண்டுகளின் விசையை இழுத்து அனைவரையும் கொல்லுங்கள்!
நமது வேலையைக் காட்டுவோம்!
கடத்தல்காரன் தன் உடம்பில் பொருத்திய குண்டுகளை வெடிக்கச் செய்ய முற்படுமுன் அதிரடிப் படையின் வெடி நிபுணன் லயிட் முந்திக் கொண்டு-
முன்னதாக விமானத்தின் வயிற்றுப் பகுதியின் வெளிப் பக்கமாய் பொருத்தியிருந்த கைக்குண்டு வளையத்தை தூர இயக்கக் கருவியால் வெடிக்கச் செய்ய.


ஆ ஆ!
தூக்கி எறியப் பட்டான் கொடியவன்-


முட்டாளே, எழுந்திரு-
குண்டுகளின் இணைப்பை
நெகிழ்த்தி வெடிக்கச் செய்-
பயணிகளைச் சாக வை!
எல்லோரும் கூண்டோடு
அழியட்டும்!


நீ அதிகமாய்ப் பேசுகிறாய்!
ஆஆஆ!


அதே சமயம் கீழே விழுந்து
கிடந்த மொட்டையன் சடா
ரென எழுந்து-
எங்கள் இயக்கத்தின்
புனித நோக்கம் நிறை
வேற என் உயிரைத்
தியாகம் செய்வேன்!
குண்டின் பாதுகாப்பு கம்பி
யினை உருவி எடுத்து விட்
டேன்-எல்லோருமே சாகப்
போகிறோம்!


பயம் வேண்டாம்-
முடிந்தது- நம் கதை!


போ-வெளியே போய்ச் செத்துத் தொலை!
ஆ ஆ ஆ!


வெடி ஏற்கனவே விமானத்தில் ஏற்படுத்தியிருந்த பெரிய ஓட்டையின் வழியே உதைத்து தள்ளப்பட்டான் அந்தக் கடைசிக் கடத்தல்காரன்.


மறுகனம்-வெளியே காதைச் செவிடாக்கும் பலத்த ஓசை-
டுமால்!
தன் கொள்கைப்படியே உயிர்த்தியாகம் செய்ய அவனை அனுமதித்து விட்டோம்!
துணைக்கு ஆள் சேர்க்காமல் போய்ச் சேர்ந்தானே- அந்த வகையில் சந்தோஷம் தான்!




சமயத்தில் வந்து எங்களை-யெல்லாம் காப்பாற்றி விட்டீர்கள்!
நீ-நீங்கள் பெரும் சாகஸ வீரர்கள்!
எங்கள் கடமையைச் செய்திருக்கிறோம் அவ்வளவே!


அனைவரது ஒத்துழைப் பினாலும் கடத்தலை வெற்றி- கரமாக முறியடித்து விட்டோம்!


ஹென்ரி-சரக்குப் பகுதி கதவினைத் திறம்படத் திறந்து நாம் உள்ளே நுழைய பெரிதும் உதவினாய் நீ.
அது- அது ஒன்றும் பிரமாதமான காரியமில்லை. ஆனால் எனக்கு இந்த டுமீல் சத்தம் தான் பெரிய அலர்ஜியாய் இருக்கிறது!


ஆனால் அங்கே குண்டு வெடிப்பின் தொடர்ச்சி இன்னும் கொஞ்சம் இருக்கவே செய்தது—
நாம் இனி செயல்பட வேண்டியதுதான்!
கடத்தல்காரர்களின் ஐந்தாவது கூட்டாளி ஒருவனும் அங்கே அடையாளம் காட்டாதிருந்-தான் இதுவரை!
இந்த பிரிட்டிஷ் அதிரடிப்படை வீரர்களை முதலில் சுட்டுப் பொசுக்குவோம்!


அவனது நடவடிக்கையை கவனித்த
ஒரே நபர் துப்பாக்கி வெடிக்கு
தொடை நடுங்கும் முன்னாள்
குற்றவாளி ஹென்றியே!
இன்னொரு கடத்தல் காரன்!


சற்றும் யோசிக்காமல்
சடாரெனச் செயல்பட்டான்-
ஹோ!


டுமீல்!
டுஷ்!
ஆவ்!


கடத்தல் கூட்டாளிகளில் மற்றுமொருவன்-ஹென்று சுட்டுக் கொன்று விட்டான்!


மறுகணம் நிதானத்திற்கு வந்த ஹென்றியிடம் கோழைத்தனம் திரும்பவும் குடி புகுந்து கொள்ள உதறலெடுத்த கைகளினின்று கழன்று கொண்டது துப்பாக்கி.


பயணிகளனைவரும் பத்திரமாய் தரை இறங்கினர்-
நம்மைக் காப்பாற்றிய இவ்வீரர்கள் யார்?
அவர்கள் யாராயிருந்தாலும் சரி, அனைவருமே தீரச் செயலுக்கான மெடல் பெறத் தகுதியானவர்கள்!
குறிப்பாய் கடைசி கடத்தல்காரனை சுட்டுக் கொன்ற நபருக்கு கட்டாயம் தந்தாக வேண்டும்!




லயன் காமிக்ஸ் சார்பாக வெளியிடுபவரும் ஆசிரியரும்: S. விஜயன். முகவரி: லயன் காமிக்ஸ், த. பெ. 55, சிவகாசி-626123. போன்: 21159. வெளியீடு எண்: 39, அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி.


ஜோக்கர்
இந்தக் குழாயை ஏதாவது குறும்புக்குப் பயன்படுத்தினால் என்ன?
JOKER'S HOUSE
தெருவில்-
ம்ம்- சீக்கிரமாக ஆகட்டும்! தோரணங்களையும் கொடிகளையும் வேகமாக கட்டி விட்டுப் போகலாம்!
அந்த ஆள் போய்விட்டார்! என் வேலையைக் காட்ட இது தான் சமயம்!
இடப்பக்கமாய் கட்டு!
ஓ. கே. பாஸ்!
இன்னும் கொஞ்சம் மேலே!
எதிர்பக்கமாய் கட்டு!
உத்தரவு பாஸ்!
ஆல்ரைட் பாஸ்!
பிறகு-
ஐயையோ-இவ்வளவு பெரிய சிக்கலாகி விட்டதே-எப்படி?
எல்லாம் பாஸோட தப்பு! அவர்தானே கீழே நின்று விபரம் சொல்லிக் கொண்டிருந்தார்!
ஹி! ஹி! ஏமாந்து போனார்கள்! குழாய் வழியாக நான் தான் பேசினேன்!


- மறுகணம் -
என்னடா செய்தீர்கள்? ஐந்து நிமிஷம் நான் அந்தப் பக்கம் போவதற்குள்!
தோரணம் எல்லாம் போச்சே!
எல்லாம் ஜோக்கரின் வேலை!
ஓஹோ! அப்படியானால் இவர்களின் தெருவுக்கு மட்டும் தோரணம் கட்டாமல் விட்டுவிடுவோம்!
அடடா- தெரு ஆட்கள் எல்லோரும் திட்டுவார்களே!
பயப்படாதே- நான் பார்த்துக் கொள்கிறேன்!
தொடர்ந்து-
வாவ்! சூப்பர் ஜோக்கர்!
ஐயாவின் தோரணங்களே தனி ஸ்டைல் தான்!
சொய்ங்!
சொய்ங்!
சொய்ங்!
சொய்ங்!
முற்றும்.


Registered No: T /VR/29
5-வது
ஆண்டு
மலர்!
லயன்
காமிக்ஸ்